பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

★ காஞ்சிபுரம்
★ பெனரிஸ்
★ கெவி தஞ்சூர்
★ பாட்லி
★ பட்டுவேஷ்டிகள்

மற்றும் சகலவிதமான
பிளவ்ஸ் பீஸ் வகைகளுக்கும்

ராசி சில்க்ஸ்
நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை
ரூ2/50

மங்கள வைபவங்களுக்
கேற்ப, உடுபுடைவைகள்

ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

சுடர்: 4 சுக்ில ஹூ சித்திரை மீ 15 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1409 றமழான் பிறை 21 (28 - 04 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-121

# ஜனாதிபதி பிரேமாவுக்கு ராஜீவின் விசேட செய்தி!

## புதிய திருப்பத்திற்கு வழிவகுக்குமா?

கொழும்பு, ஏப்ரல் 28

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகவிருக்கும் இவ்வேளையில் -

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் விசேட செய்தி ஒன்று ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு அனுப்பி வைக்கப்பட இருப்பதாகத் தெரியவருகிறது. இன்னும் இரண்டொரு தினங்களில் கொழும்பு வர இருக்கும் இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. கே. என். சிங் இந்தியப் பிரதமரின் விசேட செய்தியைக் கொண்டு வருவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விசேட செய்தி இலங்கை - இந்திய உறவிலும், அரசியல் நிலைப்பாட்டிலும் புதிய திருப்பம் ஒன்றைக் கொண்டு வரலாம் என அரசியல் அவதானிகள் எதிர்பார்க்கின்றனர். (உ-எ)

## பழைமைமிகு புத்தர் சிலை கொள்ளையரால் சேதம்

கொழும்பு, ஏப். 28

ஆயிரம்ஆண்டுகள் பழைமை வாய்ந்ததாககூறப்படும் புத்த பெருமானின் சிலையின் தலையை இனந்தெரியாததிருடர்கள் கோஷ்டி ஒன்று உடைத்தெடுத்துச் சென்றது.

சிலையின் தலைக்குள் தங்கத்தினாலான சிறிய விலையுயர்ந்த உருவம் ஒன்றும் கண்களில் விலைமதிக்கமுடியாத இரத்தினக் கற்களும் இருந்தனஎன்று சொல்லப்பட்டது.

தங்கச்சிலை, இரத்தினக் கற்கள் ஆகியவற்றை எடுத்துக் கொண்டவர்கள் தலையை வயல்வெளியில் தூக்கிஎறிந்து விட்டுச் சென்றனர்,

மாத்தறைக்கு அருகில் உள்ள கெக்குலன்கொட புத்த விகாரையில் இருந்த புத்தர் சிலைக்கே இக்கதி ஏற்பட்டது.

## பாதிக்கப்பட்டோருக்கு அரசசேவையில் முதலிடம்

கொழும்பு, ஏப்ரல்28

அரசசேவைக்கு ஆட்களைத் திரட்டும்போது வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமைவழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இப்புதிய தொழில்வாய்ப்புத் திட்டம் உடனடியாக அமுலுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களைப்பற்றிய விவரங்களைச் சம்பந்தப்பட்ட எம். பிக்கள் மூலம் திரட்டவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது,

இத்திட்டத்தின்கீழ்வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு மாகாணங்களில் வன்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கே முதன்மை இடம் வழங்கவேண்டும் என்று அரசு தெரிவித்திருக்கிறது, [உ-எ]

## அன்ரன் பாலசிங்கத்தின் நடமாட்டம் இரகசியம்

கொழும்பு, ஏப். 28

கொழும்பில் தங்கியிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கப் பிரதிநிதி திரு. அன்ரன் பாலசிங்கத்தின் நடமாட்டம் மிக இரகசியமான முறையில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவரது பாதுகாப்பிற்காகவே இந்த ஏற்பாடு எனத் தெரிவிக்கப்பட்டது

திரு. பாலசிங்கம் நேற்று முன்தினம் காலை7.30 மணிக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தார்,

அங்கிருந்த பாதுகாப்பு அதிகாரிகள் டாக்டர் பாலசிங்கத்தையும் அவரது மனைவியையும் மிக இரகசியமான முறையில் ஹெலிக்கொப்டர் மூலம் கொழும்புக்கு அழைத்துவந்தனர்.

விமானப்பயணிகள் வரும் பகுதிக்கு அழைத்துவராமல் கட்டுநாயக்கா ஆகாயப் படைத் தளத்துக்கு ஹெலிக் கொப்டர்மூலம் திரு. பாலசிங்கமும் அவரது துணைவியாரும் கொண்டுசெல்லப்பட்டனர்.

பத்திரிகையாளர்கள் எவரும் இவர்களுடன் பேச அனுமதிக்கப்படவில்லை. பொலீஸ்

(8ஆம் பக்கம் பார்க்க)

## பாலசிங்கத்துடன் பேசும் அரச குழுவில் மேலும் பலர்

கொழும்பு, ஏப்ரல் 28

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கத்துடன் பூர்வாங்கப் பேச்சுக்களை நடத்தி வரும் அரசுத் தூதுக்குழுவில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஜனாதிபதி நேற்று அதிகரித்தார்.

பிரதமரின் முன்னாள் செயலாளரும் தற்போது எயர் லங்காவின் தலைவருமான திரு. பிராட்மன் வீரக்கூன், வெளிநாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளர் திரு. பேர்னுட் திலகரத்தின, அரசியல், பொதுவிவகாரங்களுக்கான அமைச்சரவை உபகுழுவின் செயலாளர் டபிள்யு. பி. தனசிங்க, பாதுகாப்புத் துணை அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா ஆகியோர் குழுவில் புதிதாக இடம் பெறுகின்றனர்.

புதிய உறுப்பினர்கள் தற்போது பேச்சுக்கள் நடத்திவரும் ஜனாதிபதியின் செயலாளர் திரு. கே. எச். ஜே.விஜேதாஸ, பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகல, திரு. பீலிக்ஸ் டயஸ் அபயசிங்கா ஆகியவர்களுடன் இணைந்துகொள்வர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஏனைய பிரமுகர்கள் திரு. அன்ரன் பாலசிங்கத்துடன் இணைந்துகொண்ட பிறகு பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (உ-எ)

## 25 ஆயிரம் ஆசிரிய பயிலுநர்கள் உடனடியாக நியமிக்க உத்தரவு

### மாவட்ட ரீதியில் சேவையாற்ற வேண்டும்

கொழும்பு ஏப்ரல் 28

ஜனாதிபதி பிரேமதாஸாவின் உத்தரவின்பேரில் 25 ஆயிரம் ஆசிரிய பயிலுநர்கள் உடனடியாக நியமிக்கப்படவுள்ளனர்.

ஆரம்பக்கல்வி, இடைநிலைக் கல்வி ஆகிய மட்டங்களில் கல்வி முறையினைப் பயன்படுத்தும்பொருட்டே ஜனாதிபதி இத்தீர்மானத்தை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

25 ஆயிரம் ஆசிரிய பயிலுநர்களும் மாவட்ட அடிப்படையிலேயே சேவையில் அமர்த்தப்படுவார்கள்.

4 ஆயிரம் வெளிவாரிப்பட்டதாரிகள், 5,191 ஆரம்ப பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் தொண்டர் அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களைத் தவிர இந்த ஆசிரிய பயிலுநர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

நிரந்தர நியமனம் வழங்கப்படும்வரை இவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபா படியாக வழங்கப்படும்.

நிரந்தர ஆசிரியர் இடங்களுக்கு வெற்றிடம் ஏற்படும் போது இந்த 25 ஆயிரம் ஆசிரிய பயிலுநர்களில் இருந்தே அவ்வெற்றிடங்கள் நிரப்பப்படும். [உ-எ]

### முச்சந்தி முரளி



போற போக்கிலை அடுப்படிச் சேவைக்கு ஆபத்து எண்டு சொல்லுங்கோ....!

### சுபநேரம்

28—04—1989
சித்திரை - 15
வெள்ளிக்கிழமை

சுபநேரம்;
05.58 முதல் 07.28 வரை
ராகுகாலம்:
10.28 முதல் 11.58 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### வேட்டுச்சத்தங்கள்

குருநகர், ஏப்ரல் 28

நேற்றுக்காலையிலும் நண்பகலிலும் மண்டைதீவுச் சந்திப் பக்கமாக அடிக்கடி வேட்டுச் சத்தங்கள் கேட்டன. [உ-51]

## ஞாயிறு கடைகள் திறப்பு; திங்களன்று மூடப்படும்

யாழ்ப்பாணம், ஏப்ரல்28

யாழ். நகரில் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வர்த்தக நடவடிக்கைகளுக்காகத்திறந்திருக்கும்.

முஸ்லிம் மக்களின் நோன்புப் பெருநாளை முன்னிட்டு 30 ஆம் திகதி வர்த்தக நிலையங்கள் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக வர்த்தக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேசமயம் மேதினத்தை முன்னிட்டு மே முதலாம் திகதி திங்கட்கிழமையன்று அனைத்து வர்த்தக நிலையங்கள், தொழிற்சாலைகள், சினிமா மினிசினிமா, மதுபானசாலைகள் அனைத்தையும் பூட்டி-தொழிலாளர்களுக்கு விடுமுறை வழங்கி மேதினத்தை அநுஷ்டிக்குமாறும் வர்த்தக ஊழியர் சங்கம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றது. (உ)

## ஈ. பி. ஆர். எல். எவ் நடத்தும் மேதின பொதுக்கூட்டம்

ஈ.ழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் ஈழத் தொழிற்சங்க சம்மேளனமும் இணைந்து நடத்தும் மேதினப் பொதுக்கூட்டம் யாழ்மத்திய கல்லூரி மைதானத்தில் திரு. வி. ஏ.கந்தசாமி தலைமையில் காலை 9.30 மணிக்கு நடைபெறும்,

இக்கூட்டத்தில் பல்வேறு தொழிற்சங்க பிரதிநிதிகளும் அரசியல்பிரமுகர்களும் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுவார்கள்.

இவ்வாறு ஈ. பி. ஆர். எல், எவ். விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

## பயணிகளுடன் படகில் அலைக்கழிந்த படகு!

நெடுந்தீவு, ஏப் 28

குறிகாட்டுவானில் இருந்து நூற்றுக்கும் அதிகமான பிரயாணிகளுடன் நெடுந்தீவை நோக்கிச் சென்றுகொண்டிருந்த படகு நடுக்கடலில் இயந்திரக்கோளாறு காரணமாக பயணத்தைத் தொடர முடியாத நிலையில் நீரோடு இழுத்துச் செல்லப்பட்டது.

நேற்று இச்சம்பவம் நடைபெற்றது. காற்றுக்கும் கடல் கொந்தளிப்புக்கும் மத்தியில் படகைத் திருத்தும்பொருட்டு கடலில் நங்கூரமிட முயற்சிகள் எடுக்கப்பட்டன. எனி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புயலினால் 300 பேர் பலி!

டாக்கா, ஏப்ரல் 28

பங்களாதேஷில் நேற்று முன்தினம் வீசிய புயற்காற்றினால் சுமார் 300 பேர் உயிரிழந்தனர்.

மானிக் மஞ்ச் மாவட்டத்தை புயல் தாக்கிப் பெருஞ் சேதம் விளைவித்தது. ஆயிரத்துக்கு அதிகமானோர் காயமடைந்தனர்.

20 கிராமங்கள் வரையில் இதனால் மோசமாகப் பாதிக்கப்பட்டன. [உ-எ]

## மனைவிமீது விஸ்கி ஊற்றி நெருப்பு வைத்த கணவன்!

புதுடில்லி, ஏப்ரல் 28

சீதனம் கொண்டு வராததற்காக மனைவி மீது விஸ்கியை ஊற்றி நெருப்பு வைத்த கணவனையும் அவரது பெற்றோரையும் புதுடில்லிப் பொலீஸார் கைது செய்தனர்.

எரிகாயங்களுடன் ஆபத்தான நிலையில் 21 வயது மனைவி ஷாலினி மல்ஹோத்ரா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

ஷாலினி பொலீஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில்: மதுபோதையில் வந்த கணவன், நன்றாகத் தன்னைத் தாக்கியதாகவும். பின்னர் விஸ்கியை ஊற்றி நெருப்பைப் பற்ற வைத்ததாகவும் சொன்னார். (உ - எ)

## கிராம சேவையாளராக பெண்களும் நியமனம்

பலாலி, ஏப்ரல் 28

கிராமசேவையாளர்களாக பெண்களும் நியமிக்கப்படும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது.

வறுமை ஒழிப்புத் திட்டத்தின்கீழ் 250 குடும்பங்களைக் கொண்ட ஒவ்வொரு கிராமப் பிரிவுக்கும் ஒரு கிராம சேவையாளர் என்ற அடிப்படையில் நியமனங்கள் செய்யப்படவிருக்கின்றன.

இத்திட்டத்தின் கீழ் விவசாய விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர்களாக (ஜே. வி. எஸ்.) கடமைபுரிவோரும் கிராம சேவையாளராகத் தெரிவு செய்யப்படவிருக்கின்றனர்.

இதன்படி வடபகுதியில் விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களாக க்கடமைபுரியும் 25 பெண்களும் கிராம சேவையாளராக நியமிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் கிராமசேவையாளர்களாக நியமிக்கப்பட்டது தெரிந்ததே. (உ-119)

## யாழ். பரீட்சார்த்திகளுக்கு அ'புரத்தில் நேர்முக பரீட்சை

வெளிவாரி பட்டப்படிப்புக்குப் பதிவுசெய்ய மனுச் செய்த ஆசிரியர்களுக்கான நேர்முகப்பரீட்சை அநுராதபுரம் கல்வித் திணைக்களத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இந்த நேர்முகப்பரீட்சை எதிர்வரும் மே முதலாம் திகதி காலையில் பிரஸ்தாப திணைக்கள கட்டிடத்தில்நடைபெறும்.

இந்த நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் கல்விச் சேவை ஆணைக்குழுவினால் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுவிட்டன.

ஆனால் இதுவரை இக்கடிதங்கள் கிடைக்காதவர்கள் உரிய தஸ்தாவேஜுக்களுடன் அநுராதபுரம் கல்வித் திணைக்களத்திற்குச் சென்று அவற்றைக் காட்டி நேர்முகப்பரீட்சையில் கலந்துகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிவாரிப் பட்டப்படிப்புக்கு யாழ் கல்வித் திணைக்களத்தின் மூலம் 98 பேர் விண்ணப்பித்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

## தென்னிலங்கையில் நேற்று வேலை நிறுத்தம்

தென்னிலங்கையில் தெற்கு மத்திய மற்றும் வடமேற்கு மாகாணங்களில் ஜே. வி. பி. இயக்கம் நேற்று வேலைநிறுத்தப் போராட்டம் ஒன்றை நடத்தியது.

அரச அடக்குமுறை அதிகரித்து வருவது, வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ளமை ஆகிய இரண்டையும் கண்டித்து நேற்றைய வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு ஜே. வி. பி. இயக்கம் அழைப்பு விடுத்திருந்தது (உ - எ)

## மே முதல் வாரத்தில் 7 ஆயிரம் துருப்புகள் வாபஸ்

கொழும்பு, ஏப் 28

இந்திய அமைதிப்படையினர் 7 ஆயிரம் பேர் அடுத்த மாதம் முதல் வாரத்தில் தாயகம் திரும்புவர்.

இம்மாதம் 26, 27 ஆம் திகதிகளில் அமைதிப் படையினர் திரும்பவிருந்தனர்; ஆனால் தவிர்க்கமுடியாத காரணத்தினால் அது தாமதப்படுத்தப்பட்டதாக வெளியுறவு

(8- ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனவு

நல்ல தண்ணீர் வசதியுடன் வீடுகட்டக்கூடிய ஒரு பரப்பு காணி அத்தியடி அம்பலவாணர் ரோட்டில் உள்ளது. விபரம் J.P.T. Ltd இல: 3 நவீன சந்தை, (மேல்மாடி) யாழ்ப்பாணம். (C/2388)

சொந்த பாவனையில் இருந்த நல்லநிலையில் உள்ள நீர் இறைக்கும் இயந்திரம் (Robin) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 2, இராச வீதி, நல்லூர். (10755)

ஜாம் (Jam) போத்தல் மூடிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: இல. 75. மாட்டீன் வீதி, றெயில்வே ஸ்ரேசன் அருகாமையில், யாழ்ப்பாணம். (10690)

சுன்னாகம் மின்சாரநிலைய வீதியுடன் மின்சாரநிலையத்துக்கண்மையில் 16 பரப்பு தோட்டக்காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 496, C/o உதயன், யாழ்ப்பாணம். (294)

சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் கோவிலுக்கு அருகாமையில் ஒழுங்கையுடன் கூடிய நல்ல சூழலில் வீடு சட்டக்கூடிய 4 1/2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு 497, C/o உதயன், யாழ்ப்பாணம். (295)

### New City Traders

Daytron T. V. 12'', 14'' கறுப்பு வெள்ளை. Daytron T. V. 14'', 20'' கலர், Daytron வீடியோ player. Phillips கசெற் றெக்கோடர், Phillips Gas cooker மற்றும் வீட்டுக்கு தேவையான மின் உபகரண பொருள்களையும் பெற்றுக்கொள்ள New City Traders, 135. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C/2291)

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Dekalb) (Lohmann) பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், கறுப்பு சேவல் குஞ்சுகள், [Cobb] புரொயிலர்குஞ்சுகள் [2.5.89] செவ்வாய்க் கிழமை குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படும். கூடுதலாக எடுப்பவர்களுக்கு சலுகையுண்டு. முன்கூட்டியே பதிவுசெய்க. இல 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்] (10692)

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

கறுப்பு சேவற் குஞ்சுகள், Hisey, Brownசேவற்குஞ்சுகள், புரொயிலர் குஞ்சுகள், வியாழக்கிழமை 27 04- 89 இலும், வெள்ளிக்கிழமை 28-4-89 இலும் விநியோகிக்கப்படும். சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். [278]

### தேவை

யாழ்நகரில் கிறீம் ஹவுசுக்கு காசாளர், விற்பனையாளர் தேவை. நகரின் அண்மையில் இருக்கும் பெண்கள் விரும்பத்தக்கது. டில்கா, 404, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (280)

யாழ் கன்னாதிட்டி காளியம்மன் தேவஸ்தானத்திற்கு செயலகப் பொறுப்பாளராக கடமையாற்ற ஒருவரும் ஆலய சிப்பந்தியாக கடமையாற்ற ஒருவரும் தேவை. யாழ் மாநகர எல்லைக்குள் வசிப்பவராகவும், ஆசாரசீலராகவும், ஆலயத் தொண்டு புரியும் நோக்குடையவராகவும் இருத்தல் வேண்டும். சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம். காளியம்பாள் தேவஸ்தானம், 100, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். (10699)

ஒரு சிறு கைத்தொழில் ஸ்தாபனத்துக்கு குறைந்தது 2 பரப்பு காணி மின்சார வசதியுடன் விலைக்கு அல்லது குத்தகைக்கு தேவை. விபரம்: J.P.T. Ltd., இல 3 நவீன சந்தை, (மேல் மாடி) யாழ்ப்பாணம். [C/2389]

சப்ளையர், சமையல் மற்றும் பேக்கறி வேலைகளுக்கு முன் அனுபவமுள்ள ஆட்கள் தேவை. நேரில் அல்லது கடிதம் மூலம் விண்ணப்பிக்கவும். வேலை பழகவிரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம். சுபாஸ் கபே, 176. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [276]

இரும்புக் கடைக்கு பில் கிளாக்காக பணியாற்ற ஆங்கில அறிவுள்ள பெண் கிளாக் தேவை. மாநகரசபை எல்லைக்குள்வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. 493, C/o உதயன், யாழ்ப்பாணம். [256]

### மணமகள தேவை

தஞ்சாவூர் இந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட சைவ உயர் வேளாள குலத்தைச் சேர்ந்த வர்த்தகத் தொழில் புரியும் 32 வயதுடைய 2 இல் செவ்வாய்க் குற்றமுள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. மணமகள் இந்தியாவிலோ சிங்கப்பூரிலோ வசிக்க விருப்பமுடையவராக இருத்தல் வேண்டும். சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது தொடர்பு: விளம்பர இல 53, மே/பா உதயன் யாழ்ப்பாணம். (10751)

### அச்சக ஊழியர் தேவை

கொம்போசிங் வேலை தெரிந்த பெண்கள், பிளேற்றின் மெசின் மைண்டர் தேவை. ஸ்ரீபார்வதி அச்சகம், 536, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ஆஸ்பத்திரி முன்பாக) (296)

### தவறிவிட்டது

தம்பிப்பிள்ளை கணேசபாலன் ஆகிய எனது (481521408V) இலக்கமுடைய அடையாள அட்டை 26-4-89 அன்று ஆரியகுளச் சந்திக்கும் நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் அல்லது ராணி நகை மாளிகை கன்னாதிட்டி என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். [10753]

### வாடகைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அடிப்படை வசதிகள் உடைய தனிவீடு வாடகைக்குத் தேவை. தொடர்புகளுக்கு மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, பஸ்நிலையம், யாழ்ப்பாணம் [C/2375)

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [C/2124]

### வகுப்பு

A/L 91 இரசாயனம் 108 Brown Road A/L 91 அடிப்படை இரசாயனம் முதல் வகுப்பு ஆரம்பம். ஆசிரியர் சதீஸ் பிரிவு I ஆரம்பம் 2-5 89 செவ்வாய் 6 30 a.m (செவ்வாய், வியாழன் 6 30 a m) பிரிவுII ஆரம்பம் 30-4-89 ஞாயிறு 11a.m. (சனி ஞாயிறு 11 a.m.) (261)

### பிரத்தியேக வகுப்புக்கள்

9 ஆம், 10 ஆம் வகுப்பிற்கான வர்த்தகமும், கணக்கியலும் 01- 05- 89 இல் இருந்து ஆரம்பமாகின்றது ஒரு வகுப்பில் 10 பேர் மட்டும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். விஷேட பயிற்சிகளும் இடம் பெறும். இன்றே உங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள். ஆசிரியர், 200, அரசடி வீதி, கந்தர்மடச்சந்தி யாழ்ப்பாணம். [267]

### SPOKEN ENGLISH

Spoken Eng ish புதிய பிரிவு சர்வகலாசாலைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் வசதியை முன்னிட்டு, ஆரம்பம் 29-4-89 சனி/ஞாயிறு நாட்களில். நேரம் 2-30—4-00 p.m தொடர்பு:- S. B. Iyar இல. 12, வைமன் வீதி, நல்லூர். (10663)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

கண்ணபுரம் சனசமூக நிலையத்தினரால் நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்:

| | | |
|---|---|---|
| 1 ஆம் பரிசு | இல. | 559. |
| 2 ஆம் பரிசு | இல | 401. |
| 3 ஆம் பரிசு | இல. | 132. |

(289) செயலாளர்.

## PERSONAL CLASSES

B.M.C. முன்லேன், யாழ்ப்பாணம்

**A/L** சனி ஞாயிறு பிரிவுகள்

ஆசிரியர் குழு

| | ஆசிரியர் | | A/L 89 PAPER BATCH I | A/L 91 NEW BATCH |
|---|---|---|---|---|
| CHEMISTRY | திரு. மதுரமணி | B. Sc. (Cey) | 6.30 a.m | 7.30 a.m |
| PHYSICS | திரு. சத்தியசீலன் | B. Sc. (Cey) | 7.30 a.m | 8.30 a.m |
| ZOOLOGY | திரு. ஈஸ்வரதாசன் | B. Sc. (Cey) | 8.30 a.m | 9.30 a.m |
| BOTANY | திரு. சர்வானந்தா | B. Sc. (Cey) | 9,30 a.m | 10.30 a.m |
| BASIC MATHS | திரு. விஜயகுமார் | B. Sc. (Cey) | — | 11.30 a.m |

★ அநேக மாணவர்களின் வேண்டுகோளிற்கு இணங்க Day Class Paper Classes ஆரம்பமாகவுள்ளது.

MON to FRI 3 to 5 p.m ஆரம்பம்: 1 5 89 திங்கள் 3-00 மணி.

விபரங்கள் நேரில்

(C/2242)

## பிரயாண ஒழுங்குகள்

ஜெர்மனி செல்ல விரும்புவோர் 25 வயதுக்குட்பட்டோர் (தோற்றத்தில் சிறியோராக இருத்தல் விரும்பத்தக்கது) உடனடியாகப் பயணம் மேற்கொள்வதற்கும் மற்றும் குவைத் Cleanersற்கும் வெற்றிடங்கள் உண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

சுஹேரா ரவல்ஸ்
21, வேம்படி றோட்,
யாழ்ப்பாணம். (C/2337)

## தேவை

பிரபல வர்த்தக நிறுவனமொன்றிற்கு கனரக வாகனம் செலுத்தக்கூடிய, நற்குண. ஒழுக்கமுள்ள 40 -- 50 வயதிற்குட்பட்ட சாரதி உடன் தேவை.

மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசிக்கொள்ளலாம்.

விபரங்களுக்கு:

விளம்பர இல 499,
மே/ பா. உதயன்,
யாழ்ப்பாணம்.

(C/2386)

வேகமாக விற்பனையாகின்றன

## S. L. A. S.

யூன்மாதம் நடைபெறவிருக்கும் போட்டிப்பரீட்சைக்கான வழிகாட்டி

● விடய ஆய்வு ● நுண்ணறிவு ● கிரகித்தல்

அஸ்ரன் வெளியீடு - விலை ரூபா 70. 00

யாழ் நகரில் பூபாலசிங்கம், ஸ்ரீ லங்கா, ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

★ S. L. A. S. திறந்த பரீட்சைக்கான வெளியீடுகளும் விற்பனையாகின்றன.

★ 1982, 83, 84, 86, 87 இல் நடைபெற்ற மாதிரி வினாத்தாள்களையும் உள்ளடக்கியது.

அஸ்ரன் பதிப்பகம்-
166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/2372)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



★★★

மலர்ந்தான்:

28 04 1964

●●●

உதிர்ந்தான்:

27 04-1986

### ஆசீர்வாதம் விஜயகுமார்

(பாதுகாப்பு உத்தியோகத்தர், லங்கா சீமெந்து நிறுவனம்.)

இதயத்தில் இடம் பிடித்த இரட்சகனே! வித்தகனே!
மக்களின் ஈடில்லா இனியவனே! விஜயகுமாரா!
விஜி!
மண்ணில் இருந்து உன்னை இங்கு
வாவென்று அழைக்கின்றோம்.
விண்ணில் நின் காதுகளில் நம்
சப்தம் ஒலிக்கின்றதா?
வீறு நடை போட்டு நின்ற விஜயனே! நீ
விசித்திரமாய் ஓட்டி வரும் மோட்டார் சைக்கிளை
வீதியெங்கும் ஓடவிட்டு விளையாடி மகிழ்ந்தாயே.
எங்கே நீ புறப்பட்டாய் என்று
இன்னும் நாமறியோம்.
போந்த இடம் தூரம் எது என்று
அறியோமே!
நின் பாதச் சுவடுகள் போந்த இடம் புரிகிறது.
பேதை மனம் கொண்ட நாம்
பேதலித்து வாடுகின்றோம்.
பேராரும் கண்ணீரில் நாள் முழுவதும் நனைகின்றோம்.

உமது ஆத்மாவின் சாந்திக்காக வேண்டி நிற்கும்:

தாய், தந்தை,
க. அமிர்தரஞ்சன், சகோதரர்கள், சகோதரிகள்,
சீமெந்துக் கூட்டுஸ்தாபனம், மாமாமார், மாமிமார்,
காங்கேசன்துறை. மைத்துனர்மார்.

(10695)

## VACANCY

Wanted immediately Experienced Accountant who could handle independently Shop Accounts, B. T. T., Income Tax Returns and well versed with the Books connected with Accounts, for an Establishment in Jaffna Town. Salary negotiable, age preferably between 45 - 50 years. Applicant who resides within the Municipality Area would be an advantage

**Apply to:**

Advt. No. 498, C/o UTHAYAN,
JAFFNA.

(C/2384)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. பொன்னையா வேலாயுதபிள்ளை

[கிளாக்கர்]

அன்னையின் மடியில்: 21- 06- 1918
ஆண்டவன் அடியில்: 09- 05- 1988
திதி: 28- 04- 1989

தங்கள் ஆத்மா சாந்தியடைவதாக!
தங்கள் பிரிவால் துயருறும்:
என்றும் அன்பு மறவாத
மனைவி மக்கள், பிள்ளைகள்,
மருமக்கள்.

(10757)

## 151 ஆம் நாள் நினைவஞ்சலி



### செல்வன் பிரதீபன் கிருபாகரன்

(தீபன்)

(தாவடி இந்து கலவன் பாடசாலை, 5-ஆம் ஆண்டு மாணவன்)

மண்ணகம்: 23- 03- 1978
விண்ணகம்: 28- 11- 1988

மாதங்கள் ஐந்து மறைந்தாலும் உன் - நினைவு
மாறுது எம் இதயம் அழுகிறது உன் நினைவில்
பாதகமாய்ப் பறித்திட்ட உன்னுயிரை -
இறைவன்
தன் பாதார விந்தமதில் பதித்திருப்பான்
எம் இதய மன்னவனே தீபா! விண்ணில்
நிறைந்திட்ட உனக்கு எம் இதய அஞ்சலிகள்
என்றென்றும்.

தந்தை, தாய், சகோதரர்,
உற்றார், உறவினர்.

தீபன் போட்டோ / வீடியோ,
தாவடி,
கொக்குவில்.

(298)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வன் வி. விதுலன்

சூராவத்தை சுன்னாகத்தை சேர்ந்த விவேகானந்தன் சரோஜினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் விதுலன் இன்று [28-04-1989] முதலாவது பிறந்த நாளை அவரது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, வடலியடைப்பு அப்பப்பா, அப்பம்மா, பெரிய மாமி குடும்பத்தினர், பெரியப்பா குடும்பத்தினர், சித்தப்பா, தாவடி மாமி குடும்பத்தினர், சித்தங்கேணி மாமி குடும்பத்தினர், அளவெட்டிப் பெரியப்பா குடும்பத்தினர், சங்கானை மாமி குடும்பத்தினர், மாவிட்டபுரம் மாமா குடும்பத்தினர், மேற்கு ஜேர்மனி மாமா, மாமி, கனடா அன்ரி, அங்கிள், வவாமாமா, விஜயா மாமா, அன்ரி, மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

[259]

## ரெருசோ

### மூலப்பொருள்கள் விற்பனை

- வெளிநாட்டு சிப்ஸ்
- கலர் பவுடர் வகைகள்
- வெள்ளைச் சிமெந்து
- மற்றும் தேவையான பொருள்கள்

ரெருசோ மாபிள் பதிக்கும் வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

**மாபிள்ஸ்**

281-I, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(C/2333)

## கேள்விப் பத்திர அறிவித்தல்

### நீர்ப்பாசனத் திணைக்களம்

### யாழ்ப்பாணப் பிரிவு

நீர்ப்பாசனத் திணைக்கள யாழ்ப்பாணப் பிரிவில் உள்ள நாச்சிக்குடா - சரியாலை - பல்லவராயன் கட்டு வீதி, இரண்டாம் மைல் திருத்த வேலைக்கான கேள்விப் பத்திரங்கள் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூபா 120,000/-க்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரரிடமிருந்து கிளிநொச்சி பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் பணி மனையில் உள்ள கேள்விச் சபைத் தலைவரினால் 17 - 05 - 1989 ஆம் திகதி காலை 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இவ்வேலைக்கான கேள்விப் பத்திரங்களை 02 - 05 1989 தொடக்கம் 15 - 05 - 1989 காலை 10.00 மணி வரை பிரதிப் பணிப்பாளர் அலுவலகம் கிளிநொச்சியில் பெற்றுக் கொள்ளலாம்.

இவ் வேலை சம்பந்தமான மேலதிக விபரங்களை யாழ்ப்பாணம், நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

எந்திரி. க விஸ்வலிங்கம்
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
யாழ்ப்பாணப் பிரிவு

நீர்ப்பாசன அலுவலகம்,
நாவற்குழி,
கைதடி.
21 - 04 - 1989

[சி-2240]

# விவசாயக் கிணறுகளை அமைக்க வவுனியாவில் கடனுதவி

வவுனியா, ஏப்ரல் 28

வவுனியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 40 விவசாயிகளுக்கு புதிய விவசாய கிணறுகள் அமைப்பதற்கு தலா 30 ஆயிரம் ரூபா கடனாகவும், மானியமாகவும் வழங்கப்படவுள்ளதாக விவசாய அபிவிருத்தி அதிகார சபையின் வவுனியா வலயம் இரண்டின் விவசாய முகாமையாளர் திரு. வ. ஸ்ரீஸ்கந்தராஜா தெரிவித்தார்.

இதன்படி இம்மாவட்டத்தின் ஒவ்வொரு கமநல சேவை நிலையத்திலிருந்தும், தகுதி அடிப்படையில் ஐந்து விவசாயிகள் தெரிவு செய்யப்படுவார்கள்.

இவர்கள் தமது சொந்தச் செலவில் கிணறு வெட்டிய பின்பு கிணறு கட்டுவதற்கும், நீர் இறைக்கும் இயந்திரம் வாங்குவதற்கும் 15 ஆயிரம் ரூபா கடனாகவும், 15 ஆயிரம் ரூபா மானியமாகவும் மொத்தமாக 30 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது

தகுதியான விவசாயிகள் இதற்கான விண்ணப்பப்பத்திரங்களை தங்கள் பகுதியில் உள்ள கமநல சேவை நிலையங்களில் இம்மாதம் 26 ஆம் திகதிக்குப் பின்னர் பெற்றுக் கொள்ளலாம் என்றும் விண்ணப்பங்கள் மே மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் கொடுக்கப்படவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் ஒன்று விவசாய அபிவிருத்தி அதிகார சபையின் வடமாகாண பிரதிப் பணிப்பாளர் திரு. க. கணேசரத்தினம் தலைமையில் நடைபெற்றது. வவுனியா மாவட்டத்தில் உள்ள விவசாய போதனாசிரியர்கள், பெரும்பாக உத்தியோகத்தர்கள், விவசாய முகாமையாளர்கள் இலங்கை வங்கியின் உத்தியோகத்தர்கள் ஆகியோர் அதில் கலந்து கொண்டார்கள்.

(க-164)

## கிளிநொச்சி நகரக்குளம் முழுதாக வற்றிய நிலையில்

வட்டக்கச்சி, ஏப். 28

கிளிநொச்சி நகரில் உள்ள குளம் தண்ணீர் இல்லாமல் வரண்டு கிடப்பதால் நகரிலும் அதைச்சுற்றியும் உள்ள பகுதிகளில் கடும் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் இருந்து வருகிறது.

இரணைமடுக்குளத்திலிருந்து இக் குளத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படுவது வழக்கம்.

கடந்த காலங்களில் குறிப்பிட்ட அளவு தண்ணீரை குளத்தில் விட்டு மிதமான தண்ணீரை வயல்களுக்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் திறந்து விட்டு வந்தனர்.

ஆனால் இம் முறை குளத்தில் 6 அங்குலத் தண்ணீர் கூட விட்டுவைக்கப்படவில்லை முற்று முழுவதுமாக தண்ணீர் திறக்கப்பட்டு விட்டதால் குளம் வற்றிக் காட்சியளிக்கிறது.

(இ-63)

## கிளிநொச்சிக் கொத்தணிகளில் ஜீ. சீ. ஈ. உயர்தர விஞ்ஞான வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன

தாளையடி, ஏப். 28

கிளிநொச்சி கல்வி மாவட்டத்திலுள்ள எட்டு கொத்தணிகளிலும் ஜீ. சீ. ஈ. உயர்தர விஞ்ஞான வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் கிளிநொச்சி கல்வி மாவட்டத்தில் புதிதாக நியமனம் செய்யப்பட்ட கணித, விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்கள் ஜீ. சீ. ஈ. உயர்தர விஞ்ஞான வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளிலேயே நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

(ச-144)

## புதிய பல நோக்கு கூ. சங்கம்

பருத்தித்துறை, ஏப்ரல் 28

வடமராட்சி கிழக்குக்கு என ஒரு புதிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்படவுள்ளது.

தற்போது பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கத்தின் கீழ் உள்ள எட்டுக் கிளைகளையும் பச்சிலைப்பள்ளி பளை ப. நோ. கூ. சங்கத்தின் ஏழு கிளைகளையும் உள்ளடக்கி இப்புதிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பமாகவுள்ளது என வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. தா. சந்திரசேகரம் தெரிவித்தார்.

(ச-118)

## மரண சகாய நிதி வழங்கப்பட்டது

கரவெட்டி, ஏப்ரல் 28

1987 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தின் வடமராட்சி நடவடிக்கையின் போது இராணுவத்தாக்குதலுக்கு இலக்காகி மரணமடைந்த திரு ரீ. விஜயரட்ணத்தின் குடும்பத்தினருக்கு இலங்கை வங்கியின் ஊழியர் சங்கத்தினரால் இருபதாயிரம் ரூபா மரண சகாய நிதி வழங்கப்பட்டது.

நெல்லியடி இலங்கை வங்கியில் நடைபெற்ற இவ்வைபவத்தில் இலங்கை வங்கிகளின் ஊழியர் சங்க யாழ் மாவட்டத் தலைவர் திரு. வே. தில்லைநாதன் திரு. விஜயரட்ணத்தின் மனைவி மக்களிடம் இச் சகாய நிதியை வழங்கினார்.

(ச-70)

## இராச வீதி

அச்சுவேலி, ஏப்ரல் 28

அச்சுவேலி இராசவீதி பல வருடங்களாக குண்டும் குழியுமாக காணப்படுகிறது.

[க-11]

## 17 சொகுசு பஸ்கள்

திருமலை ஏப்ரல் 28

வடக்கு - கிழக்கிற்கு மத்திய அரசு 17 சொகுசு பஸ்களை அனுப்பி வைத்துள்ளது.

மாகாண போக்குவரத்து அமைச்சர் திரு. எம். கே. அபுயூசுப்பின் கோரிக்கையின் பேரிலேயே இந்த பஸ்வண்டிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

திருமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகியடிப் போக்குகளுக்கு வழங்கப்படும் இந்த பஸ்கள் தூர இடப்பிரயாணங்களுக்கே பெரும்பாலும் பயன்படுத்தப்படும்.

[க-150]

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வி வ. டயானி

கைதடி அரசினர் முதியோர் இல்லத்தில் கடமையாற்றும் வண்ணமயில் (வண்ணக்கிளி சிவநேசமலர் தம்பதிகளின் செல்வப்புதல்வி டயானி தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று [28-04-89] முதியோர் இல்ல ஊழியர் விடுதியில் எளிமையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அத்தை, சித்தப்பா, தம்பிலுவில் 1ஆம் குறிச்சியைச் சேர்ந்த அம்மம்மா, அக்கம்மா, மாமா குடும்பத்தினர், பெரியப்பா குடும்பத்தினர், நவாச் சித்தி, பெரியப்பா குடும்பத்தினர், மயிலிட்டி பெரியம்மா, அண்ணா, அக்காமார், மற்றும் உற்றார், உறவினர், கலையுலக நண்பர்கள் பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

[275]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடியான வேலைவாய்ப்பு

**1. யப்பான்:**

நாங்கள் முன்னர் எடுத்துக்கொண்டு இருந்த கட்டிடப்பகுதி, றெஸ்ரோரன்ட் (RESTAURANT) ஆகிய வெற்றிடங்களுக்குத் தொடர்ந்தும் ஆட்களை எடுத்துக் கொண்டிருக்கின்றோம். தொடர்பு கொள்ள விரும்புவோர் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

(வயது: 20 — 42)

**2. ஓமான்:**

ஆண் கையற்காரர்கள்: கல் பதிப்பவர்கள், மேசன், தச்சுவேலையாள், ட்றைவர், மின்னிணைப்பாளர், சாரதிகள், பணிப்பெண்கள், கூலியாட்கள் ஆகியோர் உடனடியாகத் தேவை.

(3 வாரங்களில் பயணம்)

( வயது: 19 - 44 )

**3. குவைற்:**

குவைற் நாட்டுக்கு கிளினேர்ஸ் (CLEANERS) வேலைக்கு ஆட்கள் தேவை.

**4. சவூதி அரேபியா: (Saudi Arabia)**

S. O. M. C.

1. மேசன் — MASON
2. தச்சு வேலையாட்கள் — CARPENTERS
3. பிளம்பர் — PLUMBER
4. மின்னிணைப்பாளர் — ELECTRICIAN
5. சாரதிகள் — DRIVERS
6. கூலியாட்கள் — LABOURERS
7. பெயின்ரர் — PAINTERS
8. மெக்கானிக் = MECHANIC

மேற்காட்டிய வேலை விவரங்கள் அறிய விரும்புவோர் எமது ஸ்தாபனத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

**T. V. TRAVELS**
**BROWN ROAD, KOKUVIL.**

(2368)


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சிவப்பிரகாசம் சிவலிங்கம்**
[பிரதிப் பணிப்பாளர், நீர்ப்பாசன இலாகா)

**தலைமகனே! எங்கள் குலமகனே!!**
**குடும்பத்தின் ஒளிவிளக்கே!!!**

அன்பின் பிறப்பிடமாய், கருணையின் உருவமாய், பாசத்தின் உறைவிடமாய், வாழ்வின் வழிகாட்டியாய் நாங்கள் வாழ்ந்து மறைந்து இன்றுடன் [28- 4- 89] மூன்று ஆண்டுகள் சென்றாலும், எம்முயிர் உள்ளவரை உங்கள் அன்புத் திருவுருவம் எம்மைவிட்டு அகலாது.

தங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரன்.

பொற் தி வீதி,
கோண்டாவில்.

[10668]


**NEW SCIENCE ACADEMY**
B. M. C. முன்பாக — JAFFNA.

**90 A/L**
**புதிய பிரிவு**

சனி, ஞாயிறு வகுப்புக்கள்.
தூய, பிரயோக கணிதம்
(ஒரு வருட காலத்தில் முழுப் பாடத்திட்டமும் முடிக்கப்படும்.)

ஆசிரியர்: பிரேம்நாத்
ஆரம்பம்: 29. 04. 1989 Sat. 2-00 p.m.
(C/2379)

**PERSONAL CLASSES**
230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

பௌதிகவியல்
**MECHANICS**

ஆரம்பமாகிவிட்டது.
Sat. Sun. 5. 00 — 6. 30 p. m.

ஆசிரியர்:
சோதிலிங்கம், B.Sc. (Hons)
(சி/2344)


## கேள்விப் பத்திர அறிவித்தல்

### நீர்ப்பாசனத் திணைக்களம்

### யாழ்ப்பாணப் பிரிவு

நீர்ப்பாசனத் திணைக்கள யாழ்ப்பாணப் பிரிவில் உள்ள நாச்சிக்குடா - கரியாலை பல்லவராயன்கட்டு வீதி, முதலாம் மைல், ஐந்தாம் மைல் ஆறும்மைல் திருத்த வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூபா 90,000/-க்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரரிடமிருந்து நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம் யாழ்ப்பாணத்திலுள்ள கேள்விப் பத்திர சபைத் தலைவரினால் 17 - 05 - 1989 ஆம் திகதி காலை 10.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

இவ் வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்களை 02 - 05 - 1989 தொடக்கம் 15 - 05 - 1989 காலை 10.00 மணி வரை யாழ்ப்பாண நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இவ் வேலை சம்பந்தமான மேலதிக விபரங்களை நீர்ப்பாசனப் பொறியியலாளர், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

எந்திரி க. விஸ்வலிங்கம்
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
யாழ்ப்பாணப் பிரிவு.

நீர்ப்பாசன அலுவலகம்,
நாவற்குழி,
கைதடி.
21 - 04 - 1989

[சி-2241]


**உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினைப்பெறுவதற்கான**

**கம்பியூட்டர் கல்வி**

DIPLOMA IN DATA PROCESSING AND COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

ஆரம்பம்: 30. 04. 1989
(சனி, ஞாயிறு வகுப்புக்கள்)

சேரும்போது செலுத்தவேண்டியது ரூ. 500/- மாத்திரம்

O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடிய நேர செய்முறைப் பயிற்சி குளிரூட்டப்பட்ட அறையில் (IBM COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும்.

பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்கள் ஆகையால், விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பதிவு செய்துகொள்ளவும்.

விண்ணப்ப முடிவு நாள்: 29 .04. 1989




**UNIKCO COMPUTER CENTRE**
No. 5, மின்சார நிலைய வீதி,
2 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(உபதபாற் கந்தோர் அருகாமை)

(சி/2303)


## எரிபொருள் நிலையத் திறப்பு விழா

முல்லைத்தீவு, ஏப்ரல் 28

முல்லைத்தீவு கரைதுறைப் பற்றுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்திய எரிபொருள் ஸ்தாபனம் 1984ஆம் ஆண்டுமுதல் பாதுகாப்பு வலயத்தில்இருப்பதால் முல்லைமக்கள் தங்கள் எரிபொருள்களைப் பெறமுடியாத நிலையில் இருந்துள்ளனர்.

கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர்சபை உறுப்பினர்களும் தலைவரும் எடுத்தமுயற்சியினால் இந்த எரிபொருள் விற்பனவு நிலையம் திறந்து வைக்கப்படுகிறது.

புதிய எரிபொருள் நிலையமொன்றைத் திறந்துவைத்து உரையாற்றியமுல்லைமாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு: க. பாலச்சந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

விழாவுக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. தி. சிவபாதம் தலைமைவகித்தார்.

[க-92)

## இளைப்பாறினார்

பச்சிலைப்பள்ளி, ஏப்ரல் 28

பளை அரசினர் வைத்தியசாலையில் பதிவுபெற்ற வைத்தியராக் கடமையாற்றிய டாக்டர் திருமதி ஏ. திருஞானசம்பந்தர் தனது சேவையிலிருந்து இளைப்பாறினார் [ச-117[

## இடமாற்றம்

பருத்தித்துறை, ஏப்ரல், 28

பருத்தித்துறை தபால்நிலைய பிரதம தபாலதிபர் திரு, தம்பையா சற்குணனந்தராஜா மட்டக்களப்பு பிரதம தபாலக மேற்பார்வை உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். [ச-118]

## சுட்டுக்கொலை

கொழும்பு, ஏப்ரல் 28

பொலன்னறுவ பொலீஸ் பகுதியில் ஜயந்திபுர என்னும் இடத்தில் கடந்த ஞாயிறு இரவு இரண்டு இளைஞர்கள் இனந்தெரியாதவர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

★ ★

கொழும்பு வடக்குப்பிராந்திய போக்குவரத்துச் சபையில் பணிபுரிந்து வந்த கண்டக்டர் ஒருவர் கடந்த திங்கட்கிழமை ஜாஎல டிப்போவுக்கு அருகில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார்,

மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இளைஞர்களே அவரைச்சுட்டுவிட்டு தலைமறைவாகியதாகக் கூறப்படுகிறது. (உ-எ)

## வன்னியில் மழை!

ஒட்டுசுட்டான், ஏப்ரல் 28

நீண்ட இடைவேளைக்குப் பின்பு வன்னிப்பகுதியில் பரவலாக மழை பெய்தது.

முள்ளியவளை, ஒட்டுசுட்டான், மாங்குளம் பகுதிகளிலும் ஏனைய பல கிராமங்களிலும் மழை பெய்தது [ஒ-113]

## ஜனசக்தி சட்டமூலம்

கொழும்பு, ஏப்ரல் 28

ஜனசக்தி சட்டமூலம் புதனன்றுநாடாளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. [அ எ]

## வியாபாரிமூலையில் கொள்ளை

வல்வெட்டித்துறை, ஏப் 28

பருத்தித்துறை, வியாபாரிமூலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இரு கடைகளில் கொள்ளைகள் இடம்பெற்றுள்ளன.

ஒரு கடை உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருள்கள் மற்றும் பணம் என்பன சூறையாடப்பட்டுள்ளன.

மற்றைய கடையில் கொள்ளையர்கள் புகுந்து பொருள்களைச் சுருட்டிக் கொண்டிருந்தபோது அயலவர்கள் அவர்களைச் சத்தமிட்டுக் கலைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-160)

Thank You St. Jude for the first Favour Granted.
P. P.
(10684)


**Uduvil Girl's College**
**Dept. of Fur.her Education**

**COURSES**

- German Language - 6 month Course
  **Registration on 5-5-89**
- Stenography - English & Tamil (Pitmans London)
- National Certificate in English (London - Sri Lanka)
- A. A. T. (Sri Lanka & London)
- I. A. B. (Sri Lanka & London)

**Apply before 2-5-89**
**Registration 3-5-89**

[C/2380] DIRECTRESS.



புங்குடுதீவு / தென்இந்தியத் திருச்சபையின்

**தொழிற் கல்வி நிலையத்திற்கு ஆசிரியர்கள் தேவை**

1. தையல் ஆசிரியர்கள்
2 சுருக்கெழுத்து — தட்டெழுத்து (ஆங்கிலம்) ஆசிரியர்கள்
3. சுருகெழுத்து — தட்டெழுத்து (தமிழ்) ஆசிரியர்கள்

அனுபவம் உள்ளோர்க்கு முன்னுரிமை வழங்கப்படும்
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
விண்ணப்ப முடிவு தேதி:- 10-5-89

நிர்வாகி
குருமனை, புங்குடுதீவு

(286)



**COMMERCIAL ACADEMY**
1st Lane, Power House Road,
**JAFFNA.**

**90,91 A/L கலை,வர்த்தகம்**

" சனி, ஞாயிறு வகுப்புக்கள் "

| | | |
|---|---|---|
| ECONOMICS | — | லோகசிங்கம் |
| ACCOUNTS | — | யோகராஜா |
| COMMERCE | — | தேவா |
| LOGIC | — | சந்திரராஜா |
| TAMIL / HINDU CULTURE | } | செல்வராஜா |

**ஆரம்பம்: 29. 04. 1989**
**Sat. 10.00 a. m.**

[சி/2376]


## 9th Death Anniversary



Our beloved who left a void,
LUTHER JAMES SELVARAJAH
Fondly remembered by

Wife: Ranee
&
Children: Dusyandan, Nilluka.

"SELVA GIRI"
57, ARASADY ROAD,
JAFFNA.

(187)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ நிர்வாகப் பரவலாக்கம் ★ புனரமைப்பு ★ கோட்டக்கல்வி அமைப்பு

# வடக்கில் இரண்டாவது தவணையில் மூன்று திட்டங்களுக்கு முன்னுரிமை

## பிரதிக் கல்விப் பணிப்பாளர் பேட்டி

யாழ்ப்பாணம் கல்வி இலாகாவில் அண்மையில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பதவி ஏற்றுள்ள செல்வி திலகவதி பெரியதம்பியைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றோம்.

கனிவான பேச்சும் இனிமையான பழக்கமும் உடைய செல்வி பெரியதம்பி உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் 'ராஜா' என்று அன்பாக அழைத்து உரையாடும் பண்பைக் கொண்டவர்.

வேலைப் பளுமத்தியிலும் பத்திரிகையாளர்களை இனிய முகத்துடன் வரவேற்று அவர்கள் மூலமாகப் பொது மக்களுக்குச் செய்திகளை வெளியிடுவதில் என்றுமே பின் நிற்காதவர் செல்வி பெரியதம்பி.

அவர் தமது ஆரம்பக் கல்வியைப் பருத்தித்துறை சின்னையா பாடசாலையிலும் இரண்டாந் தரக் கல்வியைப் பருத்தித்துறை மெதடிஸ்த பெண் பாடசாலையிலும் பெற்றார். பின்னர் பல்கலைக் கழகம்



செல்வி திலகவதி பெரியதம்பி

புகுந்து விவசாயத்துறையில் (விஞ்ஞான) மாணிப்பட்டம் பெற்றார். அதன்பின் விவசாயத்துறையிலே முதுமாணிப் பட்டமும் இலங்கை விவசாய நிறுவனத்தின் பட்டப்பின் பட்டத்தையும் பெற்றார்.

கல்வி அமைச்சின் விவசாய பாடவிதானப் பகுதியில் கடமையாற்றிய இவர் விவசாயக் கல்வி அதிகாரியாக 1975 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். வவுனியாவிலும் யாழ்ப்பாணத்திலும் விவசாயக் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றிய இவர் ஸ்ரீ லங்கா கல்வி நிர்வாக சேவை இரண்டாம் தரத்துக்குப் பதவி உயர்த்தப்பட்டார். யாழ் மாவட்டத்தில் முதலாவதாக நெல்லியடியில் அமைக்கப்பட்ட கோட்டக் கல்வி காரியாலயத்தின் அதிகாரியாகப் பணிபுரிந்து யாழ் மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்த்தப்பட்டார்.

இவர் தனது முதல் பணியாக கல்வி இலாகாவின் அதிகாரங்களைப் பரவலாக்கம் செய்வதற்காக கோட்டக் கல்வி காரியாலயங்களைத் திறந்து கோட்டக் கல்வி அதிகாரிகளை நியமிப்பதில் முழுக் கவனத்தையும் செலுத்தவிருக்கிறார். அத்துடன் கொத்தணி அமைப்புக்கள் இன்னும் அமைக்கப்படாத இடங்களில் கொத்தணிகளை உடனடியாக அமைப்பதற்கான வேலைகளை மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பதாகப் பூர்த்தி செய்யவிருக்கிறார்.

பாடசாலைகளின் புனரமைப்பு அடுத்ததாக இவரின் கவனத்தைக் கவர்ந்துள்ளது. புனரமைப்பின்போது கட்டட தளபாட வசதிகளுக்கு முதலுரிமை வழங்கப்படும்.

பாடசாலைகளில் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கல் மற்றொரு முக்கிய திட்டமாகும். இதைத் திறம்படச் செயல்படுத்த பெற்றோர்கள் நலன்விரும்பிகள் ஆகியோரின் அபிப்பிராயங்களைக் கேட்டறிவதில் இவர் அக்கறையுடையவராகக் காணப்படுகிறார்.

கோட்டக்கல்வி அலுவலகங்கள் அமைக்கப்பட்டபின் பாடசாலைகளின் மேற்பார்வை இருமட்டங்களில் நடைபெறும். கொத்தணி அதிபருடன் கல்வி ஆலோசகர்களும் சேர்ந்து திடீர் பரிசோதனைகளை நடத்துவார்கள். அத்துடன் யாழ் கல்வி அலுவலகமும் காலத்துக்குக் காலம் பாடசாலைகளில் பரிசோதனைகளை நடத்தும்.

ஆசிரியர்களுடைய அன்றாடப் பிரச்சினைகள் கோட்டக் கல்வி அலுவலகங்களால் தீர்த்து வைக்கப்படும். பாடசாலைகளின் அபிவிருத்தி, பாடசாலைக் கட்டட வேலைகள், ஓய்வூதியம், களஞ்சியப் பொருள்கள் பங்கீடு, ஆசிரிய பங்கீட்டு மேற்பார்வை ஆகியவைகளைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அலுவலகமே

**பேட்டி - கதிரோன்**

தொடர்ந்தும் செய்யும்.

ஆரம்பப் பாடசாலைகளின் வளர்ச்சி தொழிற்கல்வி, விஞ்ஞானக்கல்வி ஆகிய துறைகளில் தனது கவனத்தைச் செலுத்தவிருக்கும் பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஆரம்ப பாடசாலைகளில் ஆசிரியர்கள் கற்பித்தலுக்கான உபகரணங்களை வைத்தே வகுப்பறையில் பாடங்களை ஆரம்பிக்க வேண்டும் என்பதில் மிகவும் உறுதி உள்ளவராகக் காணப்படுகிறார்.

பூரணத்துவம் பெற்ற தொழிற் கல்விக்கான ஒரு பகுதி யாழ் கல்வி இலாகாவில் இயங்கி வருகிறது. பாடசாலை தொழிற்கல்வி முறைசாராக் கல்வி, வாழ்க்கைத் திறன் கல்வி ஆகியன நிதி உதவி வழங்கும் நிறுவனங்களின் உதவிகளோடு சிறப்பாக நடை

பெறுகின்றன. அத்துடன் தொழிற்கல்வியைப் பெறும் மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு வசதிகளையும் உள்ளூரிலேயே பெற்றுக் கொடுக்க முயற்சி செய்யப்படுகிறது.

விஞ்ஞானக் கல்வியைப் பொறுத்தளவில் பெரும் பாதிப்புக்களுக்கு உள்ளான பாடசாலைகளில் விஞ்ஞான கூடங்கள் சேதமடைந்து செயல்பட முடியாத நிலைமையில் உள்ளன. உதாரணமாக வடமராட்சியில் மேல் வகுப்புகளுக்கு விஞ்ஞானம் கற்பிக்கப்படும் ஒன்பது பெரிய பாடசாலைகளில் இன்று மூன்றில் மட்டுமே விஞ்ஞான கூடம் உண்டு. 'நாங்கள் விஞ்ஞானத்தை வகுப்பறைகளில் கற்பிக்கிறோம். செய்கையில் கற்பிக்க முடியாத நிலையில் இருக்கிறோம்' என வருத்தம் தெரிவித்தார் பிரதிக் கல்விப்பணிப்பாளர்.

'பொதுப் பரீட்சையாக நடத்தப்படும் தவணைப் பரீட்சைகளை வடக்கு கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சு பொறுப்பேற்பது பற்றி இன்னும் எமக்கு அறிவிக்கப்படவில்லை. எமக்கு அறிவுறுத்தல் கிடைக்கும் வரை இன்று நடைமுறையில் உள்ளபடியே பரீட்சைகள் நடத்தப்படும்' எனப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கூறினார்.

மாணவர்கள் ஆசிரியர்கள் மத்தியில் பல்வேறுபட்ட சந்தேகங்களை உருவாக்கி இருக்கும் 'தொடர்மதிப்பீடு' பற்றி விசாரித்தபொழுது அவர் கூறியதாவது; தொடர் மதிப்பீட்டை நிறுத்தும்படி இது வரை எமக்கு ஒரு பணிப்புரையும் கிடைக்கவில்லை. நான் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு விசாரித்தபொழுது அவர்கள் தொடர்ந்து செய்யுங்கள் எனக் கூறினார்கள். அதையே நான் ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் பெற்றோர்களுக்கும் கூறவிரும்புகிறேன். தொடர் மதிப்பீடு ஒவ்வொரு பாடசாலையிலும் தொடர்ந்து செய்யப்பட வேண்டும். இது கட்டாயம் என வலியுறுத்திக் கூறினார்.

யாழ் மாவட்டத்தின் இரண்டாவது பெண் கல்விப் பணிப்பாளரான செல்வி திலகவதி கடமையில் கண்ணும் கருத்துமாய் நின்று உரிய வேலைகளை உரியவேளையில் செய்து முடிக்கும் பழக்கத்தை உடையவராகையால் இவரின் நிர்வாகத்தில் ஆண்கள் சாதிக்கமுடியாத சிலவற்றை இவர் சாதிப்பார் என்ற நம்பிக்கை ஆசிரியர்கள் மத்தியில் நிலவுகிறது. இவரின் பண்பு, அறிவு, திறமை கல்வி அமைச்சின் புதிய கல்வித் திட்டங்களைத் திறம்படச் செயற்படுத்த உதவும். தமக்குத் தேவையான பொருள்களை அம்மாவிடம் கேட்டு வாங்கும் பிள்ளைகளைப் போன்று ஆசிரிய சமுதாயமும் தமதுகுறைகளைத் தாய் உள்ளம்படைத்த திலகவதி அம்மாவிடம் சொல்லி ஆறுதல் பெறுவார்களாக.

★

கல்விச் சுடர்
உதயன் - மாணவர், ஆசிரியர் சிறப்பகம்

---


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை.

## மருத்துவ பீடம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான விண்ணப்பதாரரிடமிருந்து விண்ணப்பங்கள் என்னல் பெற்றுக் கொள்ளப்படும்.

(1) உடலமைப்பியல் பேராசிரியர்
(2) மருத்துவப் பேராசிரியர்
(3) எலும்புமுறிவு அறுவை சிகிச்சையில் (ஓர்தோபெடிக் சேர்ஜரி) அறக்கொடைத்தவிசு (என்டோமென்ற்)
(4) நோயியல் பேராசிரியர்
(5) ஒன்கொலஜி பேராசிரியர் (அறக்கொடைத்தவிசு - என்டோமென்ற்)
(6) I. நோயியல்/ ஒட்டுண்ணியல்/ உடற்றொழிலியல்/ மகப்பேற்றியலும் மாதர் நோயியலும்/ குழந்தை மருத்துவம்/ அறுவைச் சிகிச்சையியல்/ சமூக மருத்துவம்/ சட்ட மருத்துவம் ஆகியவற்றில் சிரேஷ்ட விரிவுரையாளர்/ விரிவுரையாளர்.
II. நுண்ணியல் சிரேஷ்ட விரிவுரையாளர்
(7) நோயியல்/ ஒட்டுண்ணியியல்/ உடற்றொழிலியல்/ மகப்பேற்றியலும் மாதர் நோயியலும்/ குழந்தை மருத்துவம்/ அறுவை சிகிச்சையியல்/ சமூக மருத்துவம்/ சட்ட மருத்துவம் ஆகியவற்றில் தற்காலிக சிரேஷ்ட விரிவுரையாளர்/ தற்காலிக விரிவுரையாளர்.
(8) உடற்றொழிலியல்/ ஒட்டுண்ணியியல் ஆகியவற்றில் உதவி விரிவுரையாளர்/ தற்காலிக விரிவுரையாளர்.
(9) உயிர் இரசாயனவியல்/ உடலமைப்பியல் ஆகியவற்றில் தற்காலிக விரிவுரையாளர்.

அறக்கொடைத்தவிசுப் பேராசிரியர், பேராசிரியர் பதவிகளுக்கான முடிவு திகதி: 1989- 07- 17.
ஏனைய பதவிகளுக்கான முடிவு திகதி: 1989- 05- 29.

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களையும் விபரங்களையும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் 20/- ரூபா செலுத்தி இவ்வலுவலகத்தில் பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்தல் வேண்டும். படிவங்களையும் ஏனைய விவரங்களையும் தபால் மூலம் பெற விரும்புவோர் ரூபா 20/- பெறுமதியான காசுக் கட்டளை/ தபாற் கட்டளையை 23 x 10 ச. மீ. அளவுடைய சுய முகவரியிட்டு முத்திரையொட்டப் பெற்ற கடித உறையுடன் அனுப்புதல் வேண்டும். பேராசிரியர் பதவிக்கான விண்ணப்பப் படிவத்தைப் பெற விரும்புவோர் ரூபா 1. 50 சத முத்திரை ஒட்டப் பெற்ற 23 x 10 ச. மீ. அளவுடைய சுய முகவரியிடப் பெற்ற கடித உறையும் அனுப்பப்படல் வேண்டும்.

1. மேற்குறிப்பிட்ட பதவிக்காகத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரியின் சிறப்புத் தகைமைகளையும்/ அல்லது அனுபவத்தையும் கவனத்தில் எடுத்து சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.
2. ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியான விண்ணப்பப் படிவங்கள் தட்டெழுத்தில் பூர்த்தி செய்யப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச் சட்டசபையிலுள்ள விண்ணப்பதாரி அவரின் நிறுவனத்தலைவர் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

**பதில் பதிவாளர்.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1989. 04. 18. (C/2366)


---

## சாதனை வீரன் வீ. கே. ஆறுமுகம்

அமரர் வீ.கே. ஆறுமுகம் அவர்களை அறியாதார் யாரும் இலர். இவர் நெல்லியடி கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

இவர் பொலிஸ் இலாகாவில்ஒரு சாதாரண "கொன்ஸ்தாபிளா"க சேர்ந்து கடின உழைப்பினாலும் விளையாட்டுகளில் காட்டிய ஆர்வத்தினாலும் திறமையினாலும் "பொலிஸ்" இலாகாவுக்கு பெரு மதிப்பைத் தேடிக் கொடுத்து படிப்படியாகத் தனது பதவியை உயர்த்தி இறுதியில் உதவிப் பொலீஸ் அத்தியட்சகராக (ஏ. எஸ்.பீ) கடமை புரிந்து நன் மதிப்போடு பொலீஸ் இலாகாவில் இருந்து ஓய்வுபெற்றார்.

பின்பும் இவருக்கிருந்த நன் மதிப்பு இவரைக் கைவிடவில்லை. ஆகவே இவரை மக்கள் வங்கி, வட மாகாண வங்கிகளுக்கு பாதுகாப்பு பொறுப்பதிகாரியாக நியமித்தது. இப் பதவியை இவர் தனது இறுதி மூச்சு வரை திறம்பட வகித்து வந்தார்.

இவர் அகில இலங்கை உதைபந்தாட்டச் சங்க ஸ்தாபகரில் ஒருவர். இவர் தொடர்ந்து பல வருடங்களாக அதன் செயலாளராகக் கடமை புரிந்தார். அக்காலங்களில் ஸ்ரீ லங்கா உதைபந்தாட்டக் கோஷ்டிக்குப் புத்துயிர் கொடுத்து பல சிறந்த வீரர்களை உருவாக்கிய பெருமை இவரையே சாரும். மேலும் ஸ்ரீ லங்கா உதைபந்தாட்டக் கோஷ்டிக்குப் பொறுப்பாளராக இருந்து ஆசியாக் கண்டத்தில் மலேசியா, பாகிஸ்தான், இந்தியா போன்ற பல நாடுகளுக்குக் கோஷ்டியைக் கொண்டு சென்று பல போட்டிகளில் பங்குபற்றி இந்த அயல நாடுகளிலும் பெரும் புகழைத் தேடிக்கொண்ட பெருமை இவரையே சாரும். இவர் [illegible]

செயல்திறன் வாய்ந்தவர் மட்டுமல்ல, மக்களுடன் மிக அன்பாகப் பழகி கடமையிலும் கண்ணியமாக இருந்தவராவர். காலன் இவருடைய உயிரைப் பறிப்பதற்கு இரு நாட்களுக்கு



வீ. கே. ஆறுமுகம்

முன் 89- 03- 25ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கை உதைபந்தாட்ட சங்கப் பொதுக் கூட்டத்தில் பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கச் சார்பில் பிரதிநிதியாகச் சென்று பங்குபற்றினர். அங்கே அவருக்கு அவருடைய கடந்த காலச் சேவைகளைப் பாராட்டி ஸ்ரீ லங்கா உதைபந்தாட்டச் சங்கத் தலைவர் மதிப்புக்குரிய மல்லிமாராச்சி அவர்களால் விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். அந்நாள் இரவே

**ச. க. இராசரெத்தினம்**

இவரை இருதயநோய் தழுவிக் கொண்டது. அதையும் இவர் பொருட்படுத்தாது மறுநாள் யாழ்நகர் வந்தடைந்தார்.

காலன் யாரைத்தான் விடுவான். இவருடைய எண்பதாவது வயதில் மாரடைப்பு என்னும் நோயைக் காரணமாகக் காட்டி இம் முதுபெரும் வீரருடைய உயிரை 89- 03- 27ஆம் திகதி பறித்துக் கொண்டான்.

---

## ★ வாசகர் திருமுகம் ★

### போக்குவரத்துப் பிரச்சினைகள்

தனியார் கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் நாள் தோறும் தங்கள் பாடங்கள் முடிவடைந்த பின்னர் வீதிகளை இடைமறித்துப் போவதால் போக்குவரத்து செய்யும் வாகனக்காரர், துவிச்சக்கர ஓட்டிகள், பாத சாரி மக்கள், இவர்களுக்கு எத்தனையோ அனர்த்தங்கள் ஏற்படுகின்றன

எமது மாணவச் செல்வங்கள் தம் இஷ்டப்படி வீதித் தடையை உண்டு பண்ணக் கடிமனங் கொண்டவர்களாக தான் தோன்றித் தனமாக நடந்து கொள்வதை கூடிய வரையிலும் தடை செய்து விபத்தும் ஏனைய அசௌரியங்களும் ஏற்படுவதை தடுக்க பாடசாலை அதிபர்கள் மாணவர்களுக்கும் போதனை அளிக்க வேண்டும்.

இதுதவிர தனியார் போக்குவரத்துச் சங்கங்கள் அரசாங்க வாகனப் போக்குவரத்துடன் போட்டி போட்டு ஓடும் தனியார் வாகனப் போக்குவரத்து சாரதிகளையும் கட்டுப்பாட்டுடன் வாகனத்தைச் செலுத்தும்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தர்மதாஸன்
கொழும்புத்துறை

### நிவாரணம் வழங்க ஒழுங்கு செய்வார்களா?

மன்னார்ப்பட்டினப் பகுதியில் பெரியகடை முஸ்லிம் தெரு, உப்புக்குளம், ஆகிய பகுதிகளுக்கு அகதிகளின் வறுமை நிவாரண உதவித் தொகை இதுவரை வழங்கப்படவில்லை. இதனல் ஏழை சனங்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவ்விஷயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் கூடிய விரைவாக கவனமெடுக்க வேண்டுகிறேன்.

எம். எம். அபூபக்கர்
மன்னார்

### வீதியை செப்பனிட வேண்டும்

காரைநகர் மேற்கு வீதி பல வருடங்களாக கவனிப்பாரற்று இருப்பதினால் இன்றும் குண்டும் குழியுமாக உள்ளது. அதனல் வாகனங்களும் பாதசாரிகளும் செல்ல முடியாத நிலையில் மேற்படி வீதி உள்ளது. ஆனல் வீதியின் திருத்த வேலைக்கென்று கற்களை வீதியின் இரு மருங்கிலும் கொட்டி அடுக்கி வைத்திருக்கிறார்கள். சம்பந்தப்பட்டவர்கள் இவ் வீதியை செப்பனிட ஆவன செய்வார்களா?

நலன்விரும்பி
காரைநகர்

---


மக்கள் நலன் காக்கும் பிரிவு [கோப்பாய்]

## பொது அறிவித்தல்

**தையல்; சுருக்கெழுத்து — தட்டச்சு (தமிழ், ஆங்கிலம்) வசதி குறைந்த குடும்பத்தார்க்கு இலவச பயிற்சி**

1. பயிற்சி நெறிகளுக்கு ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. பயிலுநர்:-
கோப்பாய் வடக்கு / கோப்பாய் தெற்கு / இருபாலை கிராம சேவை அலுவலர் பிரிவைச் சேர்ந்த இளைஞர் / யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பிற்குறிப்பு:-
விண்ணப்பப் படிவங்களையும் மேலதிக விவரங்களையும் பருத்தித்துறை வீதி — இருபாலையிலுள்ள அமைப்பின் தலைமை அலுவலகத்தில் 30-04-1989 ஞாயிறு காலை 9-00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

தலைமையகம்:- இருபாலைச் சந்தி, கோப்பாய். [10693]
நிறைவேற்று நெறியாளர்:- தொழிற் கல்வி திட்டப் பிரிவு மக்கள் நலன் காக்கும் பிரிவு



# NEW BECON

## பட்டப்படிப்புக்கள்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
( சித்திராலயா ஸ்ருடியோ முன்பாக )

## G. A. Q., B. A.

## வகுப்புகள்

பொருளியல்:- — வரதராஜன்
தமிழ்:- — குழந்தை
இந்துநாகரிகம்:- — காரை சுந்தரம்பிள்ளை
அரசியல்:- — தமீம்
மெய்யியல்:- — சந்திரராஜா

**ஆரம்பம்: 29. 04. 1989**
சனி 9. 00 a. m.
(சி/2365)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பல் வைத்தியர் சிகிச்சையுடன் மட்டும் நிற்காது கிராமங்களுக்கும் சென்று விளக்க வேண்டும்

## யாழ். சுகாதாரப் பணிப்பாளர் கூறுகின்றார்

யாழ்ப்பாணம் ஏப்ரல் 28 பல்வைத்தியர்கள் தங்கள் சிகிச்சை நிலையங்களில் மட்டும் இருக்காது கிராமங்களுக்கும் சென்று பல் சுகாதாரம் பற்றிப் பேச வேண்டும்.

யாழ் சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் என் கனகசபை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ், கிளிநொச்சி மாவட்டங்களில் 1988 ஆம் ஆண்டு நடந்த பல் சிகிச்சை பற்றிய மீளாய்வுக்கூட்டம் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் சமீபத்தில் நடைபெற்றது.

யாழ் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர். என். கனகசபை கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

யாழ் பிராந்திய பல்வைத்திய அதிகாரிடாக்டர் கிருஷ்ணராசா, சுகாதார வைத்திய அதிகாரிகள், பல்வைத்தியர் அதிகாரிகள், சுகாதாரக்கல்வி அதிகாரிகள், ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

யாழ் பிராந்திய பல்வைத்திய அதிகாரிடாக்டர் கிருஷ்ணராசா தமது உரையில் கூறியதாவது:

புள்ளி விவர ஆய்வின்படி சராசரியாக ஒரு பல்வைத்தியர் வருடம் 4000 பல் நோயாளருக்கு சிகிச்சை அளித்துள்ளார்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் 4.55 சதவீதமானோர் பல் துப்புரவு செய்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் 3 சதவீதமானோர் மட்டுமே பல் துப்புரவு செய்துள்ளனர்.

1915 இல் 6 பல் பிடுங்கும் போது 1 பல் அடைக்கப்பட்டது. 1988 இல் 1 பல் பிடுங்கும் போது 12 பல் அடைக்கப்பட்டுள்ளது.

பல் வைத்திய சேவையைப் பொறுத்தமட்டில் மொறுக்காவில் 800 பேருக்கு ஒரு பல் வைத்தியர் வீதமும். அமெரிக்காவில் 1600 பேருக்கு ஒருவர் வீதமும் ரஷ்யாவில் 2800 பேருக்கு ஒருவர் வீதமும் இலங்கையில் 28,000 பேருக்கு ஒருவர் வீதமும் சேவை செய்கிறார்கள்.

6 வயதுக்கு உட்பட்டோர் 66 சதவீதமும் 35 - 44 வயதினர் 89 சதவீதமும் பல் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். பல்லைப் பிடுங்குவதிலும் பார்க்க பல்லைப் பாதுகாக்க முன்வரவேண்டும்.

பல் பாதிப்படைய முக்கிய காரணம் எமது வாழ்க்கை முறையும் உணவுப் பழக்க வழக்கங்களுமே.

பல்லுக்கு முதல் எதிரி இனிப்பு. சரியான முறையில் சரியான உணவைத் தெரிவு செய்து உண்ண மக்கள் அறிவுறுத்தப்பட வேண்டும்.

99 சதவீதமானோர் தமது பற்களைச் சுத்தம் செய்கிறார்கள். ஆனால் சரியான முறையில் பல்துலக்கப்படுவதில்லை.

சிறுவயதிலிருந்தே தூரிகை மூலம் பல்லை சரியான முறையில் துலக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். பல்பொடியால் பல்லை மினுக்குகிறார்களே தவிர பல்லின் இடைவெளியிலுள்ள உணவுகளை நீக்குவதில்லை. தூரிகைமூலம் அதிக நேரம் ஒருநாளைக்கு ஒருமுறையாவது பல்லைச்சுத்தம் செய்ய வேண்டும்.

இப்படி அவர் கூறினார். (இ-18)

## பிரசவ விடுதி உணவுப் பிரச்சனை

பளை பிரசவ விடுதியில் தங்கியுள்ள பிரசவத் தாய்மாருக்கு அரைமைலுக்கு அப்பால் உள்ள வைத்திய சாலையில் இருந்தே உணவு அளிக்கப்படுகிறது.

பிரசவ விடுதியில் சமயலறை இருப்பதால் அங்கேயே சமைத்து நோயாளருக்கு விநியோகிக்கலாமென பிரசவத்தாய்மார் தெரிவிக்கின்றனர். [ச-117]

## 30 ஆவது ஆண்டு நிறைவு விழா

"நவஜீவனம்"

நவஜீவனத்தின் 30ஆவது ஆண்டு நிறைவு விழா 01 05 89 திங்கட்கிழமை இடம்பெறும்.

அன்று காலை 9 மணிக்கு நன்றி செலுத்தும் ஆராதனையும் தொடர்ந்து பொதுக்கூட்டமும், கண்காட்சி விற்பனையும் நடைபெறும்.

அன்பர்கள், பழைய மாணவர்கள் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்.

நிர்வாகி.

"நவஜீவனம்,"
பரந்தன். (10288)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
1939 - 10 - 07

உதிர்வு:
1985 - 04 - 26

திதி: 1989 - 04 - 28


### அமரர் சி தங்கராசா
(கிளமுகாமையாளர்)

எமது குலவிளக்கே! அன்பிற்கும் பண்பிற்கும் அறிவிற்கும் இருப்பிடமாய் இன்பமுடன் இல்லறம் நடாத்தி இறைவனடி சேர்ந்து நான்கு ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்கள் உள்ளத்தில் அகலாத தீபமாய் என்றும் தளிர்கிறது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்களை நினைவு கூரும்
மனைவி, மகன், மருமகள்மார், மருமகன்மார், சகோதரிகள், சகோதரர்கள், உறவினர்கள்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி. (10669)

## ஓராண்டு நிறைவு



### நல்லநாதன் ஜனார்த்தனன்
(நரேன்)

தாயின் மடியில்: 24-11-1963
தாயக மடியில்: 28-04-1988

திதி: 17.04.1989

### காணிக்கை

எங்கள் அருந்தவத்தின் தங்கத் திருப் புதல்வா!
ஜனார்த்தனா,
அன்பே, அழகே, அமுதே,
ஆருயிரின் செல்வக் களஞ்சியமே!
விடுதலை தேடி உயிர் ஈந்த
வீரத்தின் மங்காத மாணிக்கச் சுடரே!
மாறாத சோகத்திலும் ஆறாத தாகத்திலும்
நீறான சோதி முகம் நெஞ்சத்தை எரிக்குதடா!
சிந்திய பொன் சிரிப்பும் சிறு குழந்தை மொழியும்
சிந்தையில் இனிக்குதையா!
நீ தேசத்தை நேசித்தாய்!
சுதந்திரச் சுடரைப் பூசித்தாய்!
காலத்தால் சாகாத காவிய நாயகனாய்!
ஞாலமதில் என்றென்றும் வாழ்கிறாய்!
எங்கள் கண்ணீர்த் துளிகள் அனைத்திலும்
நின் காட்சியைக் காணுது நாள் விடியாது.
ஒருநாளும் உன்னை மறக்க முடியாது.
ஆணிமுத்தே இதோ எங்கள் "அன்பு நெஞ்சம்"
ஓராண்டுக் காணிக்கை.

நின் பிரியாப் பிரிவால்
நினைவழியும்:

அன்புத் தாய், தந்தை
உடன் பிறப்புக்கள்
மச்சான்மார்
உறவினர், நண்பர்கள்

'நரேன் கொட்டேர்ஜ்',
218/9, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். [10683]

## மூன்றும் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
22 - 02 - 1960

உதிர்வு:
30 - 04 - 1986

திதி: 28 - 04 - 1989


### தம்பிராசா சந்திரகாந்தன்
(வெல்டர்)

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் நல்லூர்பிரிவு, தாய், தந்தை, மனைவி, மகன், வதனபிரசாத் சகோதரர், சகோதரிகள், மைத்துனர், மைத்துனி மருமக்கள், பெருமக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றார்கள்.

இ. தம்பிராஜா

449/3 இராமலிங்கம் ரோட்,
நல்லூர் முடமாவடி. 10687)

## 26வது பிறந்த நாளும் 6 வது மாத நினைவஞ்சலியும்



### கணேஸ் சுதா (சிறி)
(லங்கா சீமெந்து கூட்டுத்தாபனமின் இணைப்பாளர் K. K. S.)

அவனிக்கு: 1963 - 04 - 28
அவனிழற்கு: 1988 - 11 - 28

பாசம் கொண்ட குடும்பத்துக்கு
பரிசுப் பொருளாய் நீ இருந்தாய்
இம் மண்ணிலே நடந்த செயல் எல்லாம்
விண்ணிலே பதிந்திடுமே
உன் பிரிவை ஏற்க முடியாமல்
உள்ளத்தால் நாளெல்லாம் அழுகின்றோம்.

உன் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா,
அண்ணா, [illegible]
[School Service Uduvil]
அக்கா, [illegible]

டச்சு ரோட்,
உடுவில், (சி/2339)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28

யாழ்ப்பாணம் தேசிய கூட்டுறவுச் சபை நடத்தும் மாவட்ட மகளிர் குழுக் கருத்தரங்கு இன்றும் நாளையும் (வியாழன் - வெள்ளி) சிறும்பியடி ஒழுங்கையில் உள்ள மணியம் கட்டடத்தில் நடைபெறும். (சு)

## கள்ளச்சாராய வேட்டை!

கொழும்பு, ஏப்ரல் 28

கம்பஹாவிலிருந்து 4 கிலோமீட்டர் தூரத்திலுள்ள ஓர் இடத்தை முற்றுகையிட்ட பொலீஸார் அங்கிருந்த கள்ளச் சாராய தொழிற்சாலை ஒன்றை முற்றுகையிட்டனர்.

ரூபா 5 லட்சம் பெறுமதியான கள்ளச்சாராயம் அங்கிருந்து கைப்பற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

30 பொலீஸாரைக் கொண்ட கோஷ்டியே இந்த முற்றுகையை நடத்தியது. (ஒ)

## ஞானோதயா சாம்பியனானது

மானிப்பாய், ஏப்ரல் 28

அளவெட்டி டைமன் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் சிறிய விளான் ஞானோதயா விளையாட்டுக் கழகம் டயனா விளையாட்டுக் கழகத்தை 3 — 0 கோல்களால் தோற்கடித்து சாம்பியனானது.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. ஸ்கந்தகுமார் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர். (ச-90)

## புத்தூர் வீனஸ் சாம்பியன்

அச்சுவேலி, ஏப்ரல் 28

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள விளையாட்டுக்கழகங்களிற்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழகம் சாம்பியனாகியது.

இறுதி ஆட்டத்தில் வீனஸ் கழக அணித்தலைவன் செல்வன் ரி. தயாபரன் தலைமையில் விளையாடிய புத்தூர் வீனஸ் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழகத்தை 1-0 கோலால் தோற்கடித்து சம்பியன் ஆனது. (ச-11)

## ஓராண்டு நினைவஞ்சலி



### கனகரத்தினம் ஜெகதீஸ்வரன்
(ஜெகன்)
[யாழ். பரியோவான் கல்லூரி மாணவன்]

மலர்வு: 27- 11- 1970
மறைவு: 09- 05- 1988

திதி: 28- 04 1989

கண்ணீர் சிந்திய ஓராண்டு!
கவலையில் கதறிய ஓராண்டு!
வேதனை நிறைந்த ஓராண்டு!
விம்மி அழுத ஓராண்டு!
கருணை அற்ற காலதேவனின்
கரங்களில் சிக்கிய ஓராண்டில்!

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிராத்திக்கின்றோம்.

பெற்றோர்: கனகரத்தினம் - கலாவதி
சகோதர சகோதரிகள்: விஜித்தா, பாலேந்திரன், திருமதி சசிசிறிதரன், மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

தகவல்: பொ. கனகரத்தினம்
இல. 441, கண்டி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம். [10634]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### செல்வன் கந்தையா - பார்த்திபன்

ஆண்டவன் மடியில்.
31 - 03 - 1989

31. 3. 1989 இல் மறைந்த எமது அருமைப் புதல்வன் கந்தையா - பார்த்திபன் அவர்களுடைய மரணச் சடங்கில் நேர்முகமாகச் சமுகமளித்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் எமது துக்கத்தில் பங்கு கொண்டவர்களுக்கும், மற்றும் பல்வேறு உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதுடன், எதிர்வரும 30 - 04 - 1989 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10. 00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பான
தந்தை, தாயார்,
அத்தான்மார், சகோதரியர்.

வே. கந்தையா,
"பார்த்திபன் ஸ்ரோர்ஸ்"
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. [10686]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:**
ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என் மற்றுச்
சான்றோர் முகத்துக் களி

**பொருள்:**
பெற்ற தாயின் முகத்திலும் கள்ளுண்டு மயங்குதல் துன்பம் தருவதாகும்: அப்படியானால், குற்றம் கடியும் இயல்புடைய சான்றோரின் முகத்தில் அது என்னவாகும்?


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
28 04 - 1989 சு. பெ. இல 23


## உள்நோக்கம் எதுவோ?

திருகோணமலையில் அரசாங்க பிரதம அலுவலகமான கச்சேரி இப்போது 'பிரடெறிக்' கோட்டையில் இயங்கி வருகிறது. நீண்ட நெடுங்காலமாக அங்கேயே கச்சேரி இயங்கி வந்திருக்கிறது.

இப்போது புதிதாக, கச்சேரியை ''பிரடெறிக்'' கோட்டையில் இருந்து மாற்றி, நகருக்குள் கொண்டு செல்வதற்கு ஆலோசிக்கப்படுவதாக, முயற்சிகள் நடப்பதாகக் கூறப்படுகிறது.

''பிரடெறிக்'' கோட்டைக்குள் இருக்கும் கச்சேரியில் தமிழ் ஊழியர்கள் பணி புரிவது இப்போது உயிராபத்து நிறைந்தது. நகரில் ஏதாவது அசம்பாவிதம் நடந்து விட்டால், அகதிகள் என்ற பெயருடன் 'பிரடெறிக்' கோட்டைப் பகுதியில், கோணேசர் கோவிலைச் சுற்றிவர அரசாங்க ஆதரவுடன் குடியமர்த்தப்பட்ட சிங்கள மக்கள், கச்சேரியில் பணிபுரியும் தமிழ் ஊழியர்களைப் பதம் பார்க்கிறார்கள்!

இப்படி ஒரு தடவை, இரண்டு தடவைகள் அல்ல, பல தடவைகள் - பலப்பல முறைகள் - தமிழ் ஊழியர்கள் உயிராபத்தை எதிர்நோக்க நேர்ந்தது. இம்மாதம் 13 ஆம் திகதி நடந்த கார்க்குண்டு வெடிப்புச் சம்பவத்தின் எதிரொலியாகவும் கச்சேரித் தமிழ் ஊழியர்கள் தாக்கப்பட்டார்கள்.

கச்சேரியில் பணி புரியும் தமிழ் ஊழியர்களின் பாதுகாப்புக்குப் பல அதிகாரிகள், பல தடவைகள் பலவிதமான உத்தரவாதங்களை, உறுதிமொழிகளைக் கொடுத்த போதிலும் எவ்வித பயனும் இல்லை. திருமலைக்கச்சேரித் தமிழ் ஊழியர்கள் தொடர்ந்து உயிராபத்துடனேயே பணியாற்ற வேண்டி உள்ளது.

அதனால் அவர்கள் -

கோட்டைக்குள் குடியமர்த்தப்பட்ட சிங்கள அகதிகள் வெளியேற்றப்பட வேண்டும் இல்லையேல் கச்சேரியை கோட்டையிலிருந்து அகற்றி நகருக்குள் இடமாற்ற வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து வேலைக்குச் செல்லாமல் பகிஷ்கரித்து வருகின்றனர்.

அதனைத் தொடர்ந்தே முதலாவது கோரிக்கையைத் தெரியாதது போலத் தவிர்த்து, இரண்டாவது கோரிக்கை குறித்து ஆலோசிக்கப்படுவதாகச் செய்தி வந்துள்ளது.

'பிரடெறிக்' கோட்டை மூன்று பக்கங்களாலும் கடலால் சூழப்பட்டது. கோட்டைப் பிரதேசத்திலேயே சரித்திரப் பிரசித்திபெற்ற, தேவாரம் பாடப்பட்ட வரலாற்றுச் சிறப்புடைய கோணேசர் ஆலயம் அமைந்துள்ளது.

அந்தப் பகுதி பாரம்பரிய தமிழ்ப் பிரதேசம். அதில் சிங்கள மக்களைக் குடியேற்றியது மட்டுமல்லாமல், திருமலையில் எங்கு நின்று பார்த்தாலும் தெரியக்கூடிய உயரத்தில் பௌத்த விகாரை ஒன்று கட்டப்படுகிறது.

திருகோணமலைக்குத் தமிழர் சொந்தம் கொண்டாடாத விதத்தில் அதனைச் சிங்களப் பிரதேசமாக்கி விட வேண்டும் என்ற தீய எண்ணம் சிங்களப் பேரினவாதிகளுக்கும் அரசுகளுக்கும் உள்ள நெடிய ஆசை. அந்த ஆசையின் ஓர் அம்சமே கோணேசர் ஆலயச் சுற்றாடல் எங்கும் சிங்கள அகதிகளின் குடியமர்த்தல். அதனை ஸ்திரப்படுத்தும் நடவடிக்கையே கச்சேரியை இடம் மாற்றும் ஆலோசனையும்.

காலுக்கு ஏற்றாற்போல சப்பாத்தை வெட்டாமல், சப்பாத்துக்குப் பொருத்தமாகக் காலை வெட்டும் இந்தக் கபட நடவடிக்கை கண்டிக்கப்பட வேண்டியது; தடுக்கப்பட வேண்டியதும் ஆகும்.

அகதிகளை அவர்கள் முன்னர் வாழ்ந்த பகுதிகளில் கொண்டு போய்க் குடியமர்த்துவதுதான் நியாயமானது அவர்களை மீளக் குடியமர்த்தப் பாதுகாப்பு இல்லை என்று சொல்லி கோவில் பிரதேசத்தைக் கபளீகரம் செய்வது என்ன நியாயம்? ஏது நீதி? விகாரைப் பகுதியாக்கி புனித பிரதேசமாக்கும் உள் நோக்கமோ?

இதுபோன்ற அநீதியான, கபடமான நடவடிக்கைகளுக்கு அரசு துணை போகும் வரை, சிங்கள - தமிழ் மக்கள் உறவு மேம்படுவதற்குப் பதில் மேலும் சீரழிந்து போகும் என்பது நிச்சயம்.

## எழுத்தாளர் நீல பத்மநாதன் தாக்குதலுக்கு ஆளானார்

திருவனந்தபுரம், ஏப்ரல் 28

தென் இந்தியாவின் பிரபல தமிழ் எழுத்தாளர்களில் ஒருவரான திரு. நீலபத்மநாதன் கடந்த 20 ஆம்திகதி சகபொறியியலாளர்ஒருவரால் தாக்கப்பட்டார்.

தாக்குதலுக்கு காரணம் திரு. நீல பத்மநாதன் எழுதிய கதை ஒன்று தான் என்று சொல்லப்படுகிறது,

திரு. நீலபத்மநாதன் கேரள மின் வாரியத்தில்நிறைவேற்றுப் பொறியியலாளராகப் பணிபுரிந்துவருகிறார்.

இவர் எழுதிய கதைஒன்று தமிழகத்தில் சஞ்சிகைஒன்றில் பிரசுரமானது.

அந்தக்கதை தன்னைவைத்து எழுதப்பட்டதாகக் கூறி திரு. அசோகன் என்பவர் அலுவலகத்துக்குள் புகுந்து திரு.பத்மநாதனைத்தாக்கினார் என்று முறையிடப்பட்டது.

திரு. நீலபத்மநாதன் இரத்தக் காயங்களுக்கு உள்ளானார்.

மின் வாரியத் தலைவர்திரு. சலீஸ்வரன் விசாரணை நடத்தினார்.

அன்றாடவாழ்வில்இடம்பெறும் சம்பவங்களை வைத்து தான் கதையை எழுதினேன், எவரையும் தாக்கி எழுதவில்லை என்று திரு பத்மநாதன் விசாரணையின் போது தெரிவித்தார். (எ)

## கழுதைகளைப் பராமரிக்க ஒரு கோடி ரூபாவை உயிலில் ஒதுக்கிய பாட்டி!

லண்டன், ஏப். 27

பிரிட்டனில் பிரிஜ்ஸ்டன் நகரில் திருமதி டொரதி லொயிட் என்பவர் 92 ஆவது வயதில் அண்மையில் காலமானார்.

அவர் தனது ஒரு கோடி 60 லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களுக்காக உயில் எழுதியிருந்தார்.

அவரின் மரணத்திற்கு பின்னர் அவரது உறவினர்கள் உயிலை எடுத்துப் பார்த்தனர்.

உயிலில், தான் வளர்த்து வந்த 3 கழுதைகளைப் பராமரிப்பதற்கு ஒரு கோடி ரூபாவை ஒதுக்கியிருந்தார்.

எஞ்சிய பணத்தைத்தான் அவர் தனது உறவினர்களுக்கு விட்டுச் சென்றார். (எ)

## பாகிஸ்தானிடம் அணுக்குண்டு தயாரிக்கும் தொழில் நுட்பம்

### மேற்கு ஜேர்மனி அறிவிப்பு

அணுக்குண்டு தயாரிக்கும் தொழில்நுட்ப வல்லமையை பாகிஸ்தான் பெற்றுவிட்டது என்று மேற்கு ஜேர்மன் நாடாளுமன்ற விசாரணைக் குழு ஒன்று அறிவித்துள்ளது.

அணுக்தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பாகிஸ்தானுக்கு இரண்டு மேற்கு ஜேர்மன் நிறுவனங்கள் விற்றுவிட்ட சம்பவம் தொடர்பாக இந்த விசாரணைக்குழு விசாரித்து வந்தது.

அதன் முடிவிலே குழு முன் சண்ட அறிக்கை வெளியிட்டது. (எ)

### சதிமுயற்சி தோல்வி

ஈரானில் சதி முயற்சிஒன்று முறியடிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

அமெரிக்க உளவாளிகளின் ஆதரவுடன் இச்சதி முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக நாடாளுமன்றசபா நாயகர் அலி அக்பார் ரப்சன்ஜானி தெரிவித்தார். (எ)

## பனமா - அமெரிக்கத் தகராறு; ஐ. நா. சபைக்கு முறையீடு

பனமா, ஏப் 27

ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் அமெரிக்கா ஈடுபட்டிருப்பதாக பனமா ஐ. நா. பாதுகாப்புச்சபைக்கு முறையிட்டிருக்கிறது.

பனமாவினுள் தீவிரவாதச் செயல்களைத் தூண்டிவிடுவதிலும் அமெரிக்கா ஈடுபட்டு வருவதாக பனமா குற்றஞ்சாட்டியது.

பனமாவின் தற்போதைய ஜனாதிபதி ஜெனரல் நொரியேகாவின் அரசைக் கவிழ்ப்பதில் அமெரிக்கா அக்கறையாக இருக்கிறது என்று பனமா அரசு, ஐ.நா. சபைக்கு அனுப்பிய முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றிவிவாதிக்க ஐ நா. பாதுகாப்புச் சபையின் அவசரக் கூட்டம் ஒன்றை நடத்தும்படிபனமாஐ.நா. பொதுச் செயலாளரைக் கேட்டுள்ளது.

## தி. மு. க அரசைக் கவிழ்க்கும் எண்ணம் மத்திய அரசுக்கு இல்லை

### மூப்பனார் அறிவிப்பு

திருச்சி, ஏப். 27

தி. மு. க அரசைக் கவிழ்க்க மத்திய அரசோ அல்லது காங்கிரஸோ முயற்சிக்கவில்லை என்று காங்கிரஸ் சட்டசபைத் தலைவர் திரு. ஜி. கே. மூப்பனார் தெரிவித்தார்.

ஜெயலலிதாவின் ராஜினாமாக் கடித விவகாரம் பற்றிய சர்ச்சைக்கு முதலமைச்சர் விரைவில்முற்றுப்புள்ளிவைக்க வேண்டும்.

தமிழ்நாடு காங்கிரஸில் மூப்பனார் கோஷ்டி ஒன்றில்லை. நான் எல்லாக் காங்கிரஸ்காரருக்கும் உரியவன்.

இப்படி திரு. மூப்பனார் சொன்னார் [எ]

* ஜனநாயக சுதந்திரம் கோரும் போராட்டம்

## அரசுத்தடையை மீறி சீன மாணவர் பீகிங் நகரில் மாபெரும் பேரணி!

### வீதிகளில் மக்கள் ஆரவார வரவேற்பு

பீகிங், ஏப்ரல் 27

சீன அரசின் கடும் எச்சரிக்கையையும் தடை உத்தரவையும் மீறி மாணவர் கிளர்ச்சி தொடர்ந்து நடைபெற்று வருவதாக அறிவிக்கப்படுகிறது.

ஆயிரக்கணக்கான மாணவர்கள் நேற்று கோஷங்கள் எழுப்பிய வண்ணம் பீகிங் நகர மத்தியில் உள்ள ரியானன்மென் சதுக்கத்தை நோக்கிச் சென்றனர்.

அச்சதுக்கத்திற்குள் எவரும் பிரவேசிக்கக்கூடாது என்று சீன அரச உத்தரவு பிறப்பித்துள்ளது.

சதுக்கத்திற்குள் பிரவேசிப்பதற்கு அரசு விதித்திருக்கும் தடை உத்தரவு மாணவர் மத்தியில் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.

சதுக்கத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த மாணவர் ''ஜனநாயகம் வாழ்க, வன்செயல்கள் ஒழிக'' என்று கோஷமிட்டபடி சென்றனர்.

வீதி ஓரங்களில் மக்கள் திரளாக நின்று மாணவரை ஆரவாரஞ் செய்து வரவேற்றனர்.

வர்த்தகர்கள் கடைகளைப் பூட்டி விட்டு வெளியே வந்து நின்று மாணவரின் ஊர்வலத்தை அவதானித்தனர்.

தொழிலாளர்கள் இரண்டு விரல்களையும் உயர்த்தி 'வெற்றி எங்களுக்கே' என்று மாணவரை வாழ்த்தினர்.

சதுக்கத்தைச் சுற்றி பொலீஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்தி உள்ளனர்.

பத்திரிகைத் தணிக்கையை நீக்கவேண்டும்; கடந்த வாரம் மாணவர் மீது பொலீஸ் நடத்திய தாக்குதலுக்கு மன்னிப்புக்கோர வேண்டும் — என்று மாணவர் தரப்பில் வற்புறுத்தப்பட்டு வருகிறது.

### நேட்டோ அமைப்பில் கருத்து வேறுபாடு

வாஷிங்டன், ஏப்ரல் 27

நேட்டோ இராணுவ அமைப்பில் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

நடுத்தர அணுவாயுத ஏவுகணைகளைத் தயாரிப்பதைக் குறைப்பது பற்றி சோவியத் யூனியனுடன் பேச்சுக்களை உடனே ஆரம்பிக்க வேண்டும் என்று மேற்கு ஜேர்மனி விரும்புகிறது.

ஆனால் அமெரிக்காவோ பேச்சுக்களை நடத்த இது தருணமல்ல என்று நிராகரித்துவிட்டது. [எ]

### பொம்மையின் கோரிக்கை

பெங்களூர், ஏப்ரல் 27

கர்நாடக சட்ட சபைக்கான தேர்தலை அடுத்த மூன்று மாதங்களுக்குள் நடத்தும்படி முன்னாள் முதலமைச்சர் எஸ். ஆர். பொம்மை கேட்டிருக்கிறார்.

கர்நாடக சட்ட சபையைக் கலைத்து ஜனாதிபதி ஆட்சியை மத்திய அரசு பிரகடனப்படுத்தியது தெரிந்ததே.

### இந்தியப் பிரதமரின் நம்பிக்கை

புதுடில்லி, ஏப்ரல் 27

காஷ்மீர் மற்றும் பஞ்சாப் மாநிலங்களில் வன்செயல்களில் ஈடுபடும் தீவிரவாதிகளை அடக்குவதில் பாகிஸ்தான் இந்தியாவுக்கு உதவும் என்று பிரதமர் ராஜீவ்காந்தி நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்,

இந்திய ஆயுதபடைகளின் தளபதிகள் மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையில் பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

மாலைதீவு சதி முயற்சியை முறியடிப்பதில் இந்திய இராணுவம் ஆற்றிய பங்கை பிரதமர் பாராட்டினார். (எ)

## நடிகர் ரஜனிகாந்தின் வரிப்பாக்கி 31 லட்சம் ரூபா

புதுடில்லி, ஏப்ரல் 27

ஆந்திர மாநில முதலமைச்சர் என். ரி ராமராவ் நடிகர் என்ற முறையில் 9 லட்சத்து 42 ஆயிரம் ரூபா மத்திய அரசுக்கு செலுத்த வேண்டும் என்று லோகசபையில் தெரிவிக்கப்பட்டது.

நிதித்துறை இணை அமைச்சர் அஜித்குமார்பஞ்ஜா இத்தகவலை வெளியிட்டார்.

மத்திய அரசுக்கு வரிப்பாக்கி செலுத்த வேண்டியவர்களில 144 கலைஞர்களும் படத் தயாரிப்பாளர்களும் அடங்குவர்.

வரிப்பாக்கி வைத்துள்ள நடிகர் பற்றிய விபரம் வருமாறு;

★ ரஜனிகாந்த் — 31 லட்சத்து 53 ஆயிரம் ரூபா
★ கமல ஹாசன் —21லட்சத்து 4 ஆயிரம் ரூபா
★ பாக்கியராஜ் — 9 லட்சத்து 82 ஆயிரம் ரூபா.

(எ)

## கல்கத்தாவில் நேதாஜி பெயரில் விமானநிலையம்

புதுடில்லி, ஏப்ரல் 27

கல்கத்தாவில் உள்ள டம்டம் விமான நிலையம் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் விமான நிலையம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

சிவில் விமானப் போக்குவரத்து மற்றும் உல்லாசப் பயணத்துறை அமைச்சர் சிவராஜ் பாட்டில் அறிவித்திருக்கிறார். எ

## விமானக் கடத்தல்காரர் குண்டுவெடித்து மரணம்

சீனபயணிகள் விமானம் ஒன்றை கடத்த முயன்ற ஒருவர் அவரது கையில் இருந்த வெடிகுண்டு வெடித்ததில் மரணமானார்.

இரண்டு பயணிகள் படுகாயமடைந்தனர்.

விமானத்தைத் தாய்வானுக்குக் கடத்திக் கொண்டு செல்லஅந்த நபர் முயற்சித்தார் அப்போது வெடிகுண்டு ஒன்றை விமானத்தில் வைக்க அவர் முயன்ற சமயம் அது வெடித்தது (எ)

## இலக்கிய நூல்களை அச்சிட்டு தமிழர் வளர்ச்சிக்கு உரமிட்டவர்

### ஈழகேசரி பொன்னையா நினைவு விழாவில் உரை

சுன்னாகம், ஏப்ரல் 28

தமிழ்மரபுக் கல்வியும் தமிழர் கலாசாரமும் புறக்கணிக்கப்பட்டு ஆங்கிலக் கல்வியும் மேல்நாட்டு நாகரிகமோகமும் மேலோங்கி இருந்த சூழலிலே பழந்தமிழ் இலக்கியஇலக்கண நூல்களை அச்சிட்டு அவற்றின் வளர்ச்சிக்கு உரமூட்டியவர் அமரர் ஈழகேசரி பொன்னையா ஆவார். நாவலர் தாமோதரம்பிள்ளை வரிசையில மதிப்பிடத்தக்க சிறந்த நூல் வெளியீட்டாளராக இவர் விளங்கினார்.

குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் நடைபெற்ற ஈழகேசரி பொன்னையா அமரத்துவம் அடைந்த 39ஆவது நினைவு ஆண்டு விழாவில் உரையாற்றும்பொழுது யாழ் பல்கலைக்கழக தமிழ் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி இ. பாலசுந்தரம் மேற்கண்டவாறு கூறினார்.

சித்திர வித்தியாதிகாரி திரு ஆ. தம்பித்துரை விழாவுக்குத் தலைமைவகித்தார்.

கலாநிதி பாலசுந்தரம் தமது உரையில் மேலும் கூறியதாவது:

எமது நாட்டிலே அச்சியந்திர அறிமுகம் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு புதிய ஒரு சகாப்தத்தைத் தோற்றுவித்தது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பழைய இலக்கியங்களைப் பாதுகாக்கவும் சைவசமய நூல்களை மக்கள் மத்தியில் பரப்பவும் அச்சியந்திரசாலை ஒன்றை நிறுவி அரிய நூல்களைப் பதிப்பித்தார்.

திருவு... [illegible] ... பிள்ளை தாமோதரம்பிள்ளை இதேகுறிக்கோளுடன் செயற்பட்டார். ஐம்பதுகளிலே தமிழ்மொழிக் கல்வி வலியுறுத்தப்பட்ட காலத்தில் ஈழகேசரி பொன்னையா துரிதமாகச் செயற்பட்டுப் பல நூல்களைப் பதிப்பித்தார். ஆத்திசூடிதொடக்கம் தொல்காப்பியம் வரையிலான நூல்களைப் பதிப்பித்து தமிழ் வளர்ச்சிக்குத் தொண்டாற்றினார்.

இப்படி அவர் கூறினார்.

சன்மார்க்க சபையின்வளர்ச்சிக்காக உழைத்த 14 பெரியவர்களை மாவை ஆதீனகர்த்தா ஸ்ரீ சு. து. சண்முகநாதக்குருக்கள் ஆசீர்வதித்தார். [ச-27]

### வேலணையில் கண்காட்சி

கோப்பாய், ஏப்ரல் 28

முறைசாராக் கல்விப் பிரிவின்கீழ் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலயத்தில் பயிற்சி முடித்து வெளியேறும் மாணவர்களினால் இன்று வெள்ளிக்கிழமை கண்காட்சி ஒன்று நடத்தப்படுகின்றது.

வைபவத்தில் தொழில் நுட்ப கல்வி அதிகாரி திரு. எஸ். சுபபிரமணியம் வேலணை கோட்டக்கல்வி அதிகாரி சி. புலேந்திரன், கொத்தணி அதிபர் எஸ். சண்முகநாதன் ஆகியோர் கலந்து கொள்வார்கள். மாணவர்களின் ஆக்கங்களைக் கொண்ட 'அருவி' என்னும் சஞ்சிகையும் இன்று வெளியிடப்படும். (ச)

### மின்சாரம் இல்லை

வல்வெட்டித்துறை, ஏப்ரல்28

கடந்த சில நாட்களாக வல்வையின் பல பாகங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்ட போதும் இந்திராணி வைத்தியசாலைக்கு மின்சாரம் வழங்கப்படாததால் தடுப்பு ஊசி போடும் நோயாளிகள் பெரிதும்பாதிக்கப் பட்டிருக்கின்றனர். (க - 160)

## சமய சிந்தனை

### தெல்லிப்பழை காசிவிநாயகர் தேர்

யாழ்ப்பாணம் ஏப். 28

தெல்லிப்பழை காசி விநாயகர் தேவஸ்தான இரதோற்சவ விழா நாளை சனிக்கிழமை நடைபெறும்.

30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவம் இடம்பெறும். (ச)

### புனித யூதாததேயு ஆலய திருநாள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28

அரியாலை புனித யூதாததேயு ஆலயத்தின் திருநாள் நிகழ்ச்சிகள் நேற்று 27 ஆம் திகதி மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடனும், செபமாலை-திருப்பலியுடனும் ஆரம்பமாகின.

இன்று 28 ஆம்திகதி மாலை 5 மணிக்கு செபமாலையும் திருப்பலியும்

பலியும் 29 ஆம் திகதி மாலை 5 மணிக்கு செபமாலையும், திருப்பலியும், நற்கருணைஆராதனையும், பவனியும் இடம் பெறும்.

30ஆம்திகதி காலை 6மணிக்கு திருப்பலியும் 7 மணிக்கு திருநாள் திருப்பலியும் திருச்சுருப பவனியும் நடைபெறும்.



ஒருவர் நபிகள் (ஸல்) அவர்களிடம் வந்து இன்ன பெண் தன்னுடைய ஏராளமான தொழுகை, நோன்பு, தர்மம் ஆகியவற்றால் பிரபல்யமடைந்து விட்டாள். ஆனால் அவள் தன் நாவினால் அயலாரைத் துன்பப்படுத்தியுள்ளாள் என்றார், அதற்கு நபி (ஸல்) அவர்கள் அப்பெண் நரகத்தில் வீற்றிருப்பாள் என்றார். மீண்டும் வந்தவர் அல்லாஹ்வின் தூதரே! இன்னும் ஒரு பெண் சொற்ப நோன்பு, சொற்ப தர்மம், சொற்ப தொழுகை உடையவள் எனப் பிரஸ்தாபிக்கப்படுகின்றாள். ஆனால் அவள் தன் நாவினால் அயலவரைத் துன்புறுத்துவதில்லை என்றார். அவள் சுவர்க்கத்திலிருப்பாள் என (ஸல்) அவர்கள் விடை பகர்ந்தார்.

**ஸஹர் முடிவு: 4. 24**
**நோன்பு திறக்கும் நேரம்: 6. 20**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மல்லி கலந்த கோப்பி

யாழ்ப்பாண முறைப்படி தயாரிக்கப்பட்ட மல்லி கலந்த கோப்பி இப்போது 100gr. பக்கட்டுக்களில் வெளிவருகிறது.

1 பைக்கட் விலை ரூபா 11-50

வியாபாரிகளுக்கு விசேட கழிவு கொடுக்கப்படும்.

**அண்ணா கோப்பிக்கடை**
யாழ்ப்பாணம்.



# உதயன்

28 - 04 - 1989 வெள்ளிக்கிழமை



வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு. பற்களுக்கு உறுதியும், வெண்மையும் கொடுப்பது

## அண்ணா பற்பொடி

அண்ணா பற்பொடி தற்பொழுது மக்களின் வசதிக்கேற்ப 100gr பைக்கட்டுக்களிலும் வெளிவருகின்றது.

100gr. வெற்றுப் பைக்கட்டுக்களைச் சேர்த்துக் கொடுத்து இனாம் பொருள்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.


# யாழ். மாணவருக்கு மதியபோசனம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளில் மதிய போசனம் வழங்குவதற்கான பூர்வாங்க வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

மதிய போசனம் வழங்குதலை எதிர்வரும் இரண்டாம் திகதி முதல் ஆரம்பிக்கும்படி அரசினால் பணிக்கப்பட்டுள்ளது. ஆயினும் இங்கு அந்தத் திகதியில் அதனை ஆரம்பிக்க முடியாதுள்ளதாக கல்வி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

எனவே சகல பாடசாலைகளும் எவ்வளவு விரைவாக மதிய போசனத் திட்டத்தை ஆரம்பிக்க முடியுமோ அவ்வளவு விரைவில் ஆரம்பிக்கும்படி யாழ் மாவட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளரினால் உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்கென அவசர அவசரமாக கொழும்பிலிருந்து 20 லட்சம் ரூபா யாழ் கல்வி அலுவலகத்திற்குக் கிடைக்க ஏற்பாடாகி உள்ளது.

மதிய போசனத்திற்கு இதுவரை பூர்வாங்க நடவடிக்கை மேற்கொண்ட பாடசாலை அதிகாரிகள் யாழ். கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு ஆரம்ப செலவுகட்கென முற்பணம் பெற்றுச் செல்லுவதுடன் இத்திட்டத்தைச் செயற்படுத்த ஆரம்பிக்குமாறும் யாழ். மாவட்டப் பிரதிப் பணிப்பாளர் செல்வி. பெரியதம்பி வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ-9)

## மே முதல்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னு நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

திருமலைத் துறைமுகத்தில் சரக்கு இறக்குமதி வேலைகள் இடம்பெற்று வருவதே இத்தாமதத்திற்குக் காரணம் என்றும் அவர் சொன்னார். [உ-எ]

## நூறு பயணி ..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

னும் நங்கூரமிட முடியாத நிலையில் படகு இழுத்துச் செல்லப்பட்டது.

இதனால் படகில் பயணம் செய்தோர்மிகுந்த பீதியடைந்தனர் நீண்ட நேரப் போராட்டத்தின் பின் படகு ஊழியர்கள் இயந்திரத்தின் கோளாறை ஒருவாறு திருத்தியதை அடுத்து படகு மீண்டும்நெடுந்தீவுக்கரையைச் சென்றடைந்தது.

சேவையில் உள்ள அரச படகு அடிக்கடி நடுக்கடலில் பழுதடைவது குறித்து இப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்து வருகின்றனர். (உ - 111)

## அன்ரன்,..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொமாண்டோக்கள் காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்தனர்.

கொழும்பிலும் இவர்கள் எவருக்கும் தெரியாத முறையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இருவரும் எங்கே தங்கியிருக்கிறார்கள் என்பது இன்னமும் தெரிவிக்கப்படவில்லை. மிக இரகசியமாகவே இவர்களது நடமாட்டம் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## திருமலை ஆசிரியர் சேவைப் பயிற்சி:
# பிறிதொரு சந்தர்ப்பத்தில் தவறியோர்க்கு வாய்ப்பு!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28

திருகோணமலையில் நடைபெறும் ஆசிரியர் சேவை முன் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டு, அதில் பங்கு கொள்ள முடியாமல் போனவர்களுக்கு பிறிதொரு சந்தர்ப்பத்தில் பயிற்சி வழங்கப்படும்.

திருகோணமலையில் கடந்த 17 ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த மேற்படி பயிற்சிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து 17 பேர் தெரிவாகியிருந்தனர்

ஆனால் திருகோணமலையில் இடம்பெற்ற வன்செயல் மற்றும் கலவரங்களினால் யாழ்ப்பாணத்திலிருந்து தெரிவானோரில் பெரும்பாலானோர் இந்தப் பயிற்சியில் பங்குபற்ற முடியவில்லை

அவர்களை கடந்த 23 ஆம் திகதிக்கு முன்னர் பயிற்சிக்கு வந்து சேருமாறு மீண்டும் ஒரு அழைப்பு விடுக்கப்பட்டது.

இருந்தும் பலர் அப்பயிற்சிக்குத் தோற்ற முடியவில்லை.

தற்போது இவர்கள் தங்கள் நிலை குறித்து அறிவதற்காக அடிக்கடி யாழ். கல்வித் திணைக்களத்திற்குச் சென்று விசாரித்து வருகிறார்கள்.

இனிமேல் இவர்களுக்கு எனத் தனியான ஒரு பயிற்சி நெறி நடத்த முடியாது எனவும்-

மீண்டும் ஒரு தொகுதியினர் ஆசிரியர் சேவை முன் பயிற்சிகு என கல்விச் சேவை ஆணைக் குழுவினால் தெரிவாகும் பட்சத்தில், அப் பயிற்சி நெறியுடன் சேர்த்து இவர்களுக்கும் பயிற்சி வழங்கப்படும் என்றும் கல்வித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (உ-9)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பத்மினி பாலச்சந்திரன்

அச்சுவேலியைச் சேர்ந்த காலம்சென்ற பத்மினி பாலச்சந்திரனின் இறுதிக் கிரியைகள் முன்னர் அறிவித்தபடி வியாழக்கிழமை [27-04-89] தவிர்க்க முடியாத காரணங்களால் நடைபெறவில்லை. அன்னாரின் இறுதிக் கிரியைகள் சனிக்கிழமை [29-04-89] காலை 9-00 மணிக்கு நடைபெறும்.

இராஜ வீதி,
அச்சுவேலி. [10759]

தகவல்:
சு. பாலச்சந்திரன்

## திரு. பொ. இராமநாதன்

(யாழ். கடல் தொழில் இலாகா ஓய்வுபெற்ற பரிசோதகர்)

யாழ். கடல் தொழில் இலாகா ஓய்வுபெற்ற பரிசோதகர் பொ. இராமநாதன் அவர்கள் 26-04-1989 இல் சிவபதமடைந்துவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மனைவி மக்கள்.

120, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம். [C/2392]

## திருமதி தையல்பாகர் அன்னலட்சுமி (பட்டு)

திருமதி தையல்பாகர் அன்னலட்சுமி (பட்டு) 27-04-1989 அன்று காலமானார்.

இவர் தையல்பாகர் (R.M.P.) அவர்களின் அன்பு மனைவியும், ஆறுமுகம் — சரஸ்வதியின் சிரேஷ்ட புதல்வியும், புஷ்பமாலாவின் அன்புத்தாயாரும், காலம்சென்ற சந்தனராஜா, சந்தனகோபால், தனலட்சுமி, குபேந்திரன் (ரூபி ஜுவலர்ஸ்), புலேந்திரன் (ஜேர்மனி), ரேசமலர், காலம்சென்ற ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், S. S. தம்பு (விவாகப் பதிவாளர், நாச்சிமார் கோவிலடி), தங்கமணி, பொன்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலம்சென்ற சிதம்பரநாதர் தையல்முத்துவின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று 27-04-1989 வியாழக்கிழமையன்று 601/3, K. K. S வீதியில் இருக்கும் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

601/3, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி.
[10763]

தகவல்:
எஸ். எஸ். தம்பு
(விவாகப் பதிவாளர்)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அமிர்தவல்லி இராஜகுலசிங்கம்

(முன்னாள் மானிப்பாய் விதானையார் மனைவி)

திருமதி அமிர்தவல்லி இராஜகுலசிங்கம் கனடாவில் காலமானார். அன்னார் காலம்சென்ற இராமேஸ்வரம் தம்பதிகளின் மகளும், முன்னாள் மானிப்பாய் விதானையாரின் மனைவியும், காலம்சென்ற இராஜயோகி, பாலசுப்பிரமணியம் (ஈழநாடு லிமிட்டெட்), இராஜபுஸ்பவல்லி (கனடா), குலத்துங்கம் (கனடா), இராஜமனோகரன் (கனடா), இராஜேஸ்வரி (கனடா), இராஜமனோகரி (கனடா), இராஜகுலேந்திரன் (கனடா), சுபாஷினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி பா. ஸ்ரீரமணி, கு. ரஞ்சனிதேவி, இரா. ஜெயந்தி, திரு. விஜயநாதன், திரு. சத்தியமூர்த்தி, இரா. நிர்மலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், இ. சிவநாதன், இ. திருநாதன், இ. லோகநாதன், இ. சோதிநாதன், இ. காசிநாதன், திருமதி வி. இராஜேந்திரா, திருமதி ச. பரமேஸ்வரன், இ. பாலேந்திரா, இ. யோகரட்ணம், இ. பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தி. நாகலட்சுமி, சோ. பூஞ்சோலை, பா. யுகபதி, கா. சுப்புலட்சுமி, யோ. வதனா, பா. ருணி, திரு. இராஜேந்திரா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் வின்னிபெக். கனடாவில் 29-04-89 சனிக்கிழமை நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: K. R. பாலசுப்பிரமணியம்

(10761)

## திரு. சண்முகம் திருச்செல்வம்

[Assessor - Income Tax Dept, Colombo]

சித்தன்கேணியைச் சேர்ந்தவரும் கொழும்பு இறைவரித் திணைக்கள வரி மதிப்பீட்டாளருமான சண்முகம் திருச்செல்வம் 26-04-1989 அன்று கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற சண்முகம்-நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் கந்தையா-தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், பாக்கியலட்சுமியின் அருமைக் கணவரும், பவானி (நுண்கலைப்பிரிவு - யாழ் பல்கலைக்கழகம்), கேதீஸ்வரன் (நோர்வே), சுகிர்தினி (நுண் கலைப்பிரிவு-யாழ் பல்கலைக்கழகம்), ராமேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசன் (உரிமையாளர்-நியூமதி ஜுவல்லர்ஸ்), சிவராமன் (உரிமையாளர்-ஸ்ரீலங்கா அச்சகம்), திருமதி பொன்னம்மா கந்தசாமி, கனகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் சிவசுப்பிரமணியம் (மின்பொறியியலாளர்-சவூதி அரேபியா), கதிர்காமராசா (உற்பத்தி முகாமையாளர், வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்), இராஜேஸ்வரி பரமேஸ்வரி, சோமசுந்தரம் (ஜெர்மனி), கணேசராசா (பொறியியலாளர்-கே. ஜீ. இன்டஸ்ரீஸ்), சண்முகநாதன் (ஜெர்மனி) தனலட்சுமி, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும், மங்கையர்க்கரசி (இந்தியா) முத்துமாரி, சிவப்பிரகாசம் (Field Officer - Henfold Estate Lindula), கந்தசாமி (ஆசிரியர்-பளவத்தை அமெரிக்கன் மிஷன் பாடசாலை), நாகதேவி, யோகேஸ்வரி ஆகியோரின் சகலனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை சனிக்கிழமை [29-04-1989] காலை 9-30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று வழுக்கையாறு மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

'திருஅகம்'
சித்தன்கேணி. [10760]

தகவல்:
க. கதிர்காமராசா

## திரு. சி. க. சபாபதி

திரு. சி. க. சபாபதி [இளைப்பாறிய சிறுப்பர் சீமெந்துக் கூட்டுத்தாபனம், முன்னாள் கொக்குவில் கிராமசபைத் தலைவர்] காலமானார். அன்னார் கனகலட்சுமியின் அன்புக் கணவரும் கோண்டாவில் நெட்டிலிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற சி. கணபதிப்பிள்ளை அன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற மார்க்கண்டு சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், சகுந்தலாதேவி, சற்குணதேவி [நோர்வே], ராஜ்குமார் [லண்டன்], சாரதாதேவி, சாந்தகுமார் [லண்டன்], சுசிலாதேவி [லண்டன்], சபாநந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், அம்பிகானந்தன், ராகவன் [பொறியியலாளர் நோர்வே], பவானந்தன் [பொறியியலாளர், மின்சார சபை, கொழும்பு], யசோ [லண்டன்] ஆகியோரின் அன்பு மாமனாரும், குமணன், இராகவன், நிவேதிக்கா, உமாசங்கர், அர்ஜுன் [நோர்வே] ஆகியோரின் அன்புப் பேரனும், இரத்தினசிங்கம் [இளைப்பாறிய தபால் அதிபர்], ஞானசேகரம் [ஆசிரியர், இ/ அ. மி. த. க. பாடசாலை,] காலஞ்சென்ற கனகலட்சுமி, காலம்சென்ற மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் மார்க்கண்டு, வீரசிங்கம், இராமநாதன், குலமணி, மீனம்பிகை, காலஞ்சென்ற பரமநாதன், காலஞ்சென்ற செல்லத்துரை, நல்லம்மா ஆகியோரின் மைத்துனருமாவார். ஈமக்கிரியைகள் 29- 4- 89 சனிக்கிழமை காலை 10 மணியளவில் கோண்டாவில் காரைக்கால் மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொள்கின்றோம்.

தகவல்,
— சி. க. இரெத்தினசிங்கம்

நெட்டிலிப்பாய்,
கோண்டாவில்.

[291]


## Jaffna College Institute of Technology Vaddukoddai.

### கட்டிட நிர்மாண பயிற்சி வகுப்புகள்

எமது அடுத்த கட்ட மேசன், தச்சுவேலை பயிற்சி நெறிகள் வைகாசி மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாகின்றன. இந்தப் பயிற்சி நெறிகள் கெயர் (CARE INTERNATIONAL) ஸ்தாபனத்தின் உதவியுடன் இலவசமாக நடத்தப்படும்.

மேசன் வேலை - 2 1/2 மாதங்கள்
தச்சு வேலை - 3 1/2 மாதங்கள்

ஆர்வமுள்ள மாணவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும் அல்லது நேரில் வரவும்.

ஒழுங்கான பயிலுநர்க்கு நாளாந்த ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படும்.

**பணிப்பாளர்.**

(சி/2382)

## CHARTERED ACCOUNTANCY EXAM

LICENTIATE I Sept - 1989

வகுப்புகள் ஆரம்பம்:
29 April 1989.

CONTACT:

NORTH CEYLON TECHNICAL INSTITUTE

14, St. Peters Lane,
Hospital Road,
JAFFNA

(C/2234)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

காரைநகர் - தங்கோடை இளைஞர் மன்ற நூலக வளர்ச்சிக்கென 23- 04- 1989 அன்று நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசில்கள் பெறுவோர் விபரம்:

| | |
|---|---|
| | ஆறுதல் பரிசில்கள்: |
| 1ஆம் பரிசு - இல. 1449 | 2382, 13.0, |
| 2ஆம் பரிசு - இல. 1903 | 122', 1905, |
| 3ஆம் பரிசு - இல. 688 | 1577 |

தங்கோடை - இளைஞர் மன்றம்,
நிர்வாகக்குழு. (285)

## தேவை

விற்பனைப் (பெண்) பணியாளர்கள் நான்குபேர் தேவை. சைக்கிள் ஓடத்தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பப்பத்திரத்துடன் நேரில் வரவும்

**துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்**
பஸ்நிலையம் முன்பாக. —சுன்னாகம்.
(C/2342)

## வெளிவந்துவிட்டது!

நடைமுறை விடயம்

### வர்த்தகம் A/L

இ. இரட்ணம்
B Com. (Hons)
H.N. Dip. Acc., AAT

கிடைக்குமிடம்:

- ★ BECON — யாழ்ப்பாணம்.
- ★ சிவாகி — சாவகச்சேரி
- ★ றேடியன்ற் — அரியாலை
- ★ ஸ்ரீலங்கா புத்தகசாலை
- ★ பூபாலசிங்கம் புத்தகசாலை,

### வர்த்தகம் A/L 91

ஆசிரியர்:
இ. இரட்ணம்

இடம்:
211/21, கோவில் வீதி
நல்லூர்.

ஆரம்பம்:
30. 4. 1989
பி. ப. 1. 00 மணி
(சி/2383)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 28 — 04 — 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org